Registered as Newspaper

ஐவுளி வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி!
''பூகோட''
தயாரிப்புக்களின்
பிடவைத்திணுசுகளுக்கு
வடமாகாண ஏக
விநியோகஸ்தர்கள்
''ராஜ்கோபால்ஸ்''
பூகோட மொத்த,
சில்லறைவிற்பனையாளர்கள்
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2. 50

மங்கள வைபவமா?
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
''ராஜ்கோபால்ஸ்''
(பட்டுச் சேலைகளின் காட்சியகம்)
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 விபவ ஹு மார்கழி மீ 27 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 02 (11-01-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 42

★ மாகாண சபைகள் மூலம்

# பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக மதிய உணவு

## ஏப்ரல் முதல் வழங்கப் போவதாக ஜனாதிபதி பிரேமா அறிவிப்பு

கொழும்பு, ஜன. 11

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் இலவசமாக மதிய உணவு வழங்கப்படும்.

மாகாண சபைகள் மூலம் இந்த இலவச மதிய உணவுத் திட்டம் செயற்படுத்தப்படும். ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா நேற்று இதனை அறிவித்தார்.

மாகாணங்களின் முதலமைச்சர்கள், மாகாணங்களின் பிரதம செயலாளர்கள் மற்றும் அரசாங்க அதிபர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த அறிவிப்பைவிடுத்தார்.

பொலிஸ் நியமனங்கள் இனி மாகாண ரீதியில் நடைபெறும் என்றும் அவர் அறிவித்தார்.

அவர் தமது உரையில் வெளியிட்ட ஏனைய முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ இலவச மதிய உணவுத் திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பு மாகாணசபைகளிலும் ஒப்படைக்கப்படும் இதற்கான நிதி உதவி அரசாங்கத்தினால் மாகாணசபைகளுக்கு வழங்கும்.

எந்தெந்த உணவுகளை வழங்குவது என்பதை அந்தந்த மாகாண சபைகளே தீர்மானிக்கலாம்

ஒவ்வொரு மாகாண சபைகளும் தமது மாகாணத்தில் உள்ள மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேசசபைகள் ஆகியவற்றை இணைத்து இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தலாம்.

★ இவ் வாரத்தில் காலாவதியாகும் அவசரகாலச் சட்டம் இனி எந்தக் காலத்திலும் நாட்டில் அமுலுக்குக் கொண்டு வரப்படும் சந்தர்ப்பம் ஏற்பட மாட்டாது

★ எல்லா இனத்தவர்களும் சம உரிமையுடன் நடத்தப்படுவார்கள்.

★ சிங்களத்துடன் தமிழும் அரசகரும மொழியாக சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

★ இனங்களுக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### பென்ஷன் திகதி விவரம்

யாழ்ப்பாணம், ஜன 11

இந்தவருடம் மாதாந்தம் பென்ஷன் வழங்கும் திகதி கொண்ட அட்டவணை ஒன்றை நாட்டின் சகல செயலகங்களுக்கும் பென்ஷன் திணைக்களம் அனுப்பிவைத்துள்ளது.

யாழ் செயலகத்திற்கு வந்துள்ள இந்த அட்டவணை வருமாறு:—

ஜனவரி-12, பெப்ரவரி 14, மார்ச்-15, ஏப்ரல்-6, மே-11, ஜூன்-15, ஜூலை 11, ஆகஸ்ட்-15, செப்ரம்பர்-12, அக்டோபர்-11 நவம்பர், -15, டிசம்பர்-14. (ஓ-எ-5)

### கடலில் மிதந்து வந்த டெலிவிஷன்கள்

தாளையடி, ஜன 11

வடமராட்சி கிழக்குப் பகுதியில் கடலில் மிதந்து வந்த டெலிவிஷன் பெட்டிகள் கரை ஒதுங்கின.

மண், நீர் ஆகியன புகுந்து அவை பாவிக்க முடியாத நிலையில் இருந்ததாகத் தெரியவருகிறது. (ஓ-144)

### துப்பாக்கிகளுடன் பொலீஸில் சரண்

கொழும்பு, ஜன 11

தீவிரவாத சந்தேக நபர் ஒருவர் இரண்டு துப்பாக்கிகளுடன் அளவ்வை பொலீஸில் சரணடைந்தார் என்று அறிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

### பிரேமா புதுமனைப் பிரவேசம்

கொழும்பு, ஜன 11

ஜனாதிபதி பிரேமதாச வருகிற வெள்ளிக்கிழமை காலை இடம் மாறுகிருர்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னரும் திரு. பிரேமதாச பிரதமரின் வாசஸ்தலத்திலேயே இப்போது வசித்து வருகிருர்.

ஜனாதிபதி மாளிகைக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை செல்வார். அன்று ஜனாதிபதி செயலகத்துக்கும் செல்வார். (ஓ-எ)

### ஜனாதிபதி தேர்தலை ஆட்சேபித்து வழக்கு

கொழும்பு, ஜன 11

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனுவை சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று முன்தினம் தாக்கல் செய்தார்.

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இம் மனுவில் எதிர்மனுதாரர்களாக ஜனாதிபதி பிரேமதாசவும் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வாவும் காட்டப்பட்டுள்ளனர். (ஓ-எ)

யாழ் ஆஸ்பத்திரியில்

### மரணித்த ஊழியர்களின் குடும்பத்திற்கு நஷ்டஈடு திங்கட்கிழமை வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன 11

யாழ். ஆஸ்பத்திரியில் 1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாத அசம்பாவிதத்தின் போது மரணமான ஊழியர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈட்டுக் காசோலைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளன.

16 ஆம் திகதி காலை பத்து மணிக்கு யாழ். தாதிகள் பயிற்சிக் கல்லூரி கேட்போர் மண்டபத்தில் வைத்து யாழ். போதனு வைத்தியசாலைப் பணிப்பாளர் திரு எஸ். நச்சினர்க்கினியன் இதற்கான காசோலைகளை வழங்குவார்.

அசம்பாவிதத்தின்போது மரணமானவர்களின் குடும்பத்திற்கு ரூபா 75 ஆயிரத்தில் இருந்து ஒரு இலட்சம் ரூபா வரை நஷ்டஈடு வழங்கப்பட உள்ளது. (ஓ-10)

### சுபநேரம்

11 -1 - 1989

சு[illegible]
5.03 முதல் 6.33 வரை
[illegible]
12.33 முதல் 2 03 வரை
இவை பாலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
சதுர்த்தி விரதம்

### பரு. கடற்கரை வீதி; பாவனைக்கு அனுமதி

பருத்தித்துறை கடற்கரைவீதி மீண்டும் போக்குவரத்துக்காக நாளை வியாழக்கிழமை திறந்துவிடப்படும்.

இவ்வீதியைக் கடந்த இரண்டு வருடங்களாக இப்பகுதி மக்கள் போக்குவரத்துக்குச் சரியாகப் பாவிக்க முடியவில்லை.

புலோலி அமைதிப் படை முகாமில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இவ்விடயம் தொடர்பாக பிரமுகர்கள் பலரும் குறை கூறினர்.

அதனை அடுத்தே நாளை இந்த வீதி திறந்து வைக்கப்படுகிறது. அமைதிப் படைப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டே வீதியைத் திறந்து வைப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

முச்சந்தி முரளி



உவர் பிரேமர் எம் ஜி ஆர். ஸ்டைலை பிடிக்கிருர் போலே......!

### தங்கத்துடன் பிடிபட்டனர்

கொழும்பு, ஜன 11

31 லட்சம் ரூபா பெறுமதியான 60 தங்க பிஸ்கட்டுக்களை இந்தியாவுக்குச் கடத்திச் செல்ல எத்தனித்தபோது கையும் மெய்யுமாகக் கைதுசெய்யப்பட்ட இரண்டு இளைஞர்களுக்கு 93 லட்சம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

பேலியகொடையில் கடந்த சனிக்கிழமை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் இவர்களைப் பிடித்தனர். (உ-எ)

பொங்கலை முன்னிட்டு

### யாழ்ப்பாணத்துக்கு விசேட ரயில் சேவை

கொழும்பு, ஜன. 11

தைப்பொங்கலை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள் யாழ்ப்பாணத்துக்கு நடத்தப்படும் என்று ரயில்வேத்திணைக்களம் அறிவித்திருக்கிறது.

எதிர்வரும் வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில காலை 5 45 மணிக்கு கோட்டையில் இருந்து புறப்படும் ரயில், யாழ்ப்பாணத்தை பிற்பகல் 2 45 மணிக்கு வந்தடையும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு திங்கள் ஆகிய தினங்களில் கொழும்பு கோட்டைக்கு ரயில் சேவை நடைபெறும்.

காலை 9 மணிக்கு யாழ் நகரில் இருந்து புறப்படும் ரயில் அன்று மாலை 6 45 மணிக்கு கோட்டையைச் சென்றடையும். (ஓ-எ)

# தவணையில் பணம் செலுத்தி அடகு நகைகளை மீட்கலாம்

## வட்டிச் சலுகையும் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன 11

வடமாகாணத்திலுள்ள மக்கள்வங்கிக் கிளைகளில் நகைகளை அடகு வைத்தவர்கள் தவணை முறையில் பணத்தைச் செலுத்தி அவற்றை மீட்டெடுக்க முடியும்

இது சம்பந்தமான உத்தரவு ஒன்று விரைவில் மக்கள் வங்கியின் யாழ் பிராந்திய தலைமை அலுவலகத்திலிருந்து வடமாகாணத்திலுள்ள சகல மக்கள் வங்கிக் கிளைகளுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

இம்மாத இறுதியிலிருந்து தவணை முறையில் பணம் செலுத்த வகை செய்யும் சலுகை அமுலுக்கு வரும.

புதிய சலுகையின்படி நகைகள் அடகுவைத்த ஒருவர் நகையை மீட்டெடுப்பதற்கான மொத்தப் பணத்தில் (வட்டி உட்பட) பத்தில் ஒரு பகுதியை முதலில் வங்கிக்குச்செலுத்த வேண்டும்

மிகுதிப் பணத்தை அவர் ஐந்து வருடகாலத்துக்குள் மாதாந்தமாகவோ அல்லது வருடாந்தமாகவோ அல்லது மூன்று அல்லது நான்கு மாத கால அடிப்படையிலோ வசதிப்படி செலு

(8-ஆம் பக்கம் பார்க்க)

★ ஈழத்தமிழர்களுக்கு

### அதிகாரத்தைப் பரவலாக்க உடன் நடவடிக்கை

#### தேவை என்கிருர் ராஜீவ்

புதுடில்லி, ஜன 11

இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு மற்றும் ஒற்றுமைக்குள் அடங்கும் வகையில் அதிகாரத்தைப் பரவலாக்கி பகிர்ந்தளிக்க வேண்டும். இது தொடர்பாக இலங்கைத் தமிழரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இவ்வாறு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி பணித்திருக்கிருர்.

பரஸ்பர நம்பிக்கை.

[8 ஆம் பக்கம் பார்க்க]

# திருமலை தபால்கள் பஸ் மூலம் வருகின்றன

யாழ்ப்பாணம் ஜன 11

திருகோணமலையிலிருந்து யாழ் குடாநாட்டிற்கான தபால்கள் பஸ் மூலம் எடுத்துவரப்படுகின்றன.

அதேவேளை மட்டக்களப்பிற்குரிய தபால்கள் மட்டக்களப்பு பஸ்மூலம் நேரடியாக அங்கு எடுத்துச் செல்லப்படும். அதே போன்று கொழும்புக்குரிய தபால்கள் கொழும்பு பஸ் மூலம் அனுப்பப்படும்.

வடகிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. ஏ.வரதராஜப்பெருமாள் எடுத்துக்கொண்ட முயற்சியை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-150)

## சு.கட்சி வேட்பாளர் குண்டு வீச்சுக்குப் பலி!

### மற்றும் இருவரும் உயிரிழப்பு

கொழும்பு, ஜன 11

களுத்துறை மாவட்டம் வாதுவையில் ஸ்ரீ. ல. சு. கட்சி வேட்பாளர் இந்திரபால அபேவீர நேற்று பிற்பகல் குண்டு வீச்சுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

அவருடன் கூடச் சென்றிருந்த அவரது மெய்ப்பாதுகாவலர் இருவரும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர்.

நகரத்தின் மத்தியில் திரு. அபேவீர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த போது இனந்தெரியாதோர் அவர் மீது குண்டுவீசியதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## கண்ணிவெடியில் சிக்கி விறகு லொறி சேதம்

### விசுவமடு காட்டில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 11

விசுவமடு காட்டுக்கு நேற்று விறகு ஏற்றச் சென்ற லொறி ஒன்று கண்ணிவெடியில் சிக்கியது.

காட்டுப் பகுதியில் ஒரு பகுதி விறகை ஏற்றிக் கொண்டு, வேருெரு பகுதிக்கு சென்று கொண்டிருக்கையில் லொறி கண்ணியில் சிக்கியது.

காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் லொறியின் சாரதி இதனைத் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் லொறியில் சென்ற இளைஞர் மரணமானுர் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் இச்செய்திகள் உர்ஜிதப் படுத்தப்படவில்லை. (ஓ-10)

## கிராம சேவையாளராக 4, 500 பேர் நியமனம்

கொழும்பு ஜன 11

4 ஆயிரத்து 500 பயிர்ச்செய்கை அதிகாரிகள் கிராம சேவையாளர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

உள்நாட்டலுவல்கள், பொது நிர்வாகத்துறை அமைச்சர் கே. டபிள்யு. தேவநாயகம் நேற்று கொழும்பில் நடந்த மாநாடு ஒன்றில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்—

புதிதாக நியமிக்கப் படுபவர்களையும்சேர்த்து நாட்டில் 11 ஆயிரம் கிராம சேவையாளர்கள் பணிபுரிவர்.

நாட்டில் மொத்தம் 20 ஆயிரம் கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. இதன்படி குறைந்தது ஒரு கிராம சேவையாளர் மூன்று கிராமசேவையாளர்

[8 ஆம் பக்கம் பார்க்க]

அவசரகாலச் சட்டம் நீங்கினலும்

## ★ இவர்கள் விடுதலை செய்யப்படமாட்டார்கள்

கொழும்பு, ஜன. 11

இந்திய அமைதிப் படையினராலும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படமாட்டார்கள்.

இப்படி பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடமராட்சி இராணுவ முற்றுகையின் போதும், அதற்கு முன்னரும் அவசரகால சட்டத்தின் கீழ் இலங்கை பாதுகாப்புப் படையினரால் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருப்போர் விடுதலையாவார்கள்.

புதிய நாடாளுமன்றம் கூடி முடிவு எடுத்தால் மட்டுமே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழும் இந்திய அமைதிப் படையினராலும் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள்.

அரச விரோதச்செயல்களில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின்

[8 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய மொடல் றிகொண்டிஷன் M.D 90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பாத்திமா சென்ரர், 144, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (8665)

அலுமினியத் தொழிற்சாலையில் சிறு பழுது அடைந்த பாத்திரங்களும், புதிய பானைகளும் தைப்பொங்கலை முன்னிட்டு மலிவு விலையில் விற்கப்படும் காலம்: 10-1-1989 தொடக்கம் 14-1-89 வரை. இடம்: பேள் உலோகத்தொழிற்சாலை, 60 மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்) (8862)

பாவித்த கண்ணாடி அலுமாரி, Show-case Table கட்டில் டிவான் கட்டில், சண்ணாடிமேசை விருந்தை செற்றி, Fan, Oven, T V Stand, பழுதடைந்த குளிர்சாதனப் பெட்டி, நிலைக்கண்ணாடி மேசை, தொட்டில் மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. 343, பருத்தித்துறை வீதி, நல்லூர், அரசடி சந்தியருகில் (8659)

பாவித்த தளபாடங்கள், கட்டில்கள், Drawing room sets, Chriso, cabinet, Dressing table Wheel chair, Baby cot, Dinner-coffee set, Revolving book case, Wardrobe, Dressing table, Brass ware Eversilver things, Fan Sanyo குளிர்சாதனப் பெட்டி மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு. Parasakthy Press, 81 K K S Road Kokuvil. (8779)

விஞ்ஞானம்

வெளிவந்து விற்பனையாகின்றது ஆரம்ப விஞ்ஞானம் ஆண்டு 4 5 6. சகுரியலை M C பிரான்சிஸ் (முன்னாள் இந்துக்கல்லூரி ஆசிரியர்) N J ஞானப்பொன்ராஜ் (சென்ஜோன்ஸ் கல்லூரி) யாழ்ப்பாண முன்னணி கல்லூரிகளின் முக்கிய பாடநூல். கல்லூரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் கழிவுவழங்கப்படும். வெளியீடு விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (8590)

கோழிக்குஞ்சுவிற்பனை

கோல்டன் கொமற், கைலைன், சில்வர் கைலைன் (பிலிமத்) கறுப்பு புள்ளி சேவல் புறயிலர், R.I.R ஆகிய இன சேவல் பேடு குஞ்சுகள் 26-1-1989 வியாழன் அன்று விநியோகிக்கப்படும். தொகையான கொள்வனவிற்கு விசேட கழிவுண்டு முன்கூட்டியே பதிவு செய்க. விபரங்களுக்கு: S T.R & சன், மாஸ்கடை, திருநெல்வேலி சந்தி, K சக்திசம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (8858)

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும் Nallur Farm Centre, C/o நல்லூர் விடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (8547)

புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க. சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (8755)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள், ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (8546)

## கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

Uplands farm ஒவ்வொரு வாரமும் வெள்ளை சேவல்குஞ்சு கறுப்பு (பிலிமத்) வரி சேவல் குஞ்சு விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவுசெய்க. இல:9 சந்தையாவேன் சுன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்). (8853)

## தேவை

7 ஆம், 6 ஆம் ஆண்டுகளுக்குரிய கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகியவை இல்லத்திற்கு வந்து கற்பிக்கக் கூடிய ஒருவர் தேவை தொடர்பு நேரில்:- க கோபால பிள்ளை, 141/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (8863)

## மணமகன் தேவை

G. C. E. O/L) வரை படித்த 31வயது நிரம்பிய சைவ போசனப் பெண்ணுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றார்கள். சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். விபரங்களுக்கு 423, C/o உதயன். (8854)

## தவறிவிட்டது

சியாமளா பரமநாதன் ஆகிய எனது அடையாள அட்டை இல 628100144X நல்லூர் கந்தசாமி கோவிலுக்கும் தட்டாதெரு சந்திக்குமிடையே (அரசடி வீதியில்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [8656]

அன்ரனி தேவபாலன் ஆகிய எனது சாரதி லைசென்ஸ் 518526 D/L யாழ்ப்பாணத்திற்கும் தெல்லிப்பழைக்கும் இடையில் C.T.B பஸ்ஸில் தவறி விட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (8660)

சதாசிவம் கோபாலநாதன் ஆகிய எனது அடையாள அட்டை இலக்கம் 500820500V கொக்குவில் சந்தியடியில் 21-12-88இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து கொக்குவில் சந்திக்கு அருகாமையிலுள்ள ரத்தினம் ஆசிரியரின் வீட்டில் ஒப்படைக்கவும் 8658)

## வீடு வாடகைக்கு உண்டு

அல்வாய் தெற்கில் தங்குவதற்கு இரண்டு வீடுகள் சகல வசதிகளுடனும் உண்டு. வாடகை தேவையில்லை வீட்டை பராமரிக்ககூடிய குடும்பத்தவர்கள் விரும்பப்படுவர் தொடர்பு கொள்ளவும், 487, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (8864)

## சேவை

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள். Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (Shabra-Samy & Co அருகாமையில்) (C/945)

## தரமான வீடியோ ஓடியோ

கசற்றுகளை றெக்கோடிங் செய்வதற்கும், தரமான புதிய திரைப்படங்களை உடனுக்குடன் வாடகைக்குப் பெறுவதற்கும் 'லிலியா' உங்கள் நம்பிக்கைக்கும், நாணயத்திற்கும் ஏற்றபடி சேவையாற்றுகிறார்கள் Liliya Video Club and Audio Recording Bar, 2 Model Market Upstair Thirunelvely (8859)

## வகுப்புகள்

### A/L 89 இரசாயனம்

A/L 89 இரசாயனம் ஆசிரியர் சத்தியின் பௌதீக இரசாயனம் ஆரம்பம் வியாழன் 12-01-89 6 30 a.m 8 15 a.m. திங்கள், செவ்வாய், புதன். வெள்ளி 7 30 am 8.15am வினாவிடை ஆரம்பம் 11-01-89புதன் 7 30a m (8856)

# அறிவித்தல்

## போட்டியிலிருந்து விலகல்

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் ஈழவர் ஜனநாயக முன்னணியின் சுயேட்சைக் குழுவில் வேட்பாளராக நியமனம் பெற்ற யான் சொந்தக் காரணங்களுக்காக வேட்பாளர் பட்டியலிலிருந்து வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் என்பதைப் பொதுமக்களுக்கு அறியத் தருகின்றேன்.

அ. பொ. செல்லையா

[8661]

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 19 | 10 | 1916

மறைவு: 23 | 12 | 1987

திதி: 11 | 01 | 1989

## திருமதி நாகலிங்கம் சின்னம்மா

அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்

சரவணை மேற்கு, வேலணை. [8662]

# அல் டி

சகல விதமான

* கைக்கடிகாரங்கள்
* சுவர்மணிக்கூடுகள்

பெற்றுக் கொள்ள யாழ் நகரில் பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

அல் டி

We undertake all kinds of Watches for Repairs

AL I

269/1, Power House Road, JAFFNA.

Prop:- S. Shanmugathasan

(C-1279)

## Vacancy for The Post of Accounts Clerk

Wanted a Male Accounts Clerk with thorough knowledge of Book-Keeping to Industrial Establishment.

Salary:- Negotiable.
Application closes on 20/01/1989

Apply 428, C/o UTHAYAN, JAFFNA

(8835)

## சொந்தச் செலவில் வெளிநாட்டில் உயர் கல்வி

இறுதிச் சந்தர்ப்பம்
LAST CHANCE 13 01. 1989
மட்டுமே!

**பிரேமானந்தஜி ரவல் வழங்கும் 1989 விருது**

★ மாணவர்களுக்கு கல்லூரி அனுமதியும் விசாவும் தொழில்நுட்பதுறை TECHNICIAN COURSE
கனடா, நோர்வே, லண்டன், ஜேர்மனி, அவுஸ்திரேலியா

★ கணக்குத் துறை ACCOUNTANCY COURSE
லண்டன், நோர்வே, அவுஸ்திரேலியா

★ தாதி Nursing
லண்டன் (பெண்களுக்கு)
வயது 17—24 ஆங்கில அறிவு அவசியம் விஞ்ஞானம் / கணிதம்
க. பொ. த. சா/த 6 திறமைச் சித்தி உயர்தரம் 4 சித்தி
பாஸ்போட் 2 - 5 பக்கம், கல்வி, பிறப்புப் பத்திரம், 3 பாஸ்போட் பிரதியும், பாஸ்போட் பிரமாண 12 புகைப்படத்துடனும் வரவும்.

★ உணவு இருப்பிட வசதி செய்து கொடுக்கப்படும். ஏனைய விபரம் நேரில்.

★ குவைத் நாடு
சாரதி 40 KD வேலையாள் 30 KD
உணவு இருப்பிட வசதியுடன்
2 வருட ஒப்பந்தம்
ஒரு மாதத்திற்குள் பிரயாணம்.

★ பாரென்
சாரதி ரூபா 5000/-
வேலையாள் ரூபா 3500/- 4000/-
உணவு இருப்பிட வசதியுடன் 2 மாதத்துக்குள் பிரயாணம். பாஸ்போட்டுடனும், 12 பாஸ்போட் பிரமாண புகைப்படத்துடனும் வரவும்.

எமக்கு வேறு கிளைகள் இல்லை, தங்கள் சேவையில்

**பிரேமானந்தஜி ரவல்**

கஸ்தூரியார் வீதி, கைதடி.
(அரசினர் ஆங்கில டிஸ்பென்சரி பின்புறம்)

(8838)

# லீலா 1989

## புதுப் பொலிவுடன்

லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர் மற்றும் டயறி தினுசுகள் அனைத்திலங்கையிலும் விற்பனையாகின்றன

இதுவரை கலண்டர், டயறி வாங்காத அன்பர்கள் உடனே ஆடரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்

**நியூ லீலா அச்சகம்**
"சின்னத்துரை கட்டிடம்"
182, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12.
தொலைபேசி: 25930

**லீலா ஸ்ரோர்ஸ்**
72 ஜி, மக்கள் நவீன சந்தை,
கொழும்பு - 11.
தொலைபேசி: 540842

# NEW MASTER INSTITUTE

241, Navalar Road, Jaffna. B. M. C. Lane, Jaffna.

## 89 A/L PAPERCLASSES

பிரிவு - I [Saturday & Sunday]

ஆரம்பம் 15- 01- 1989 Sunday 8 30 a. m

8-30 - 9-30 — Chemistry — திரு. தில்லைநாதன்
9-30 - 10-30 — Physics — திரு. வர்மா
10-30 - 11-30 — Zoology — திரு. நாகநாதன்
11-30 - 12-30 — Botany — திரு. குகாதரன்

(C-1225)

# ஓராண்டு ஞாபகார்த்த ஆராதனை



Mrs. Sundradevarani Ratnam

தோற்றம்: 10-12-1935 மறைவு: 09-11-1987

அன்பின் அம்மாவே! எம்மிடமிருந்து உங்களை காலன் பறித்து விட்டானே எம்மை தவிக்கவிட்டுச் சென்ற தெய்வீகத் செல்வமே! மெழுகுவர்த்தியாய் ஒளிர்கின்றீர் எம்முன்னே! ஓராண்டு மட்டுமல்ல ஒரு நூற்றாண்டு ஆனாலும் உங்கள் அன்புமுகம் எம்மை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தி பெற அனுதினமும் பிரார்த்திக்கிறோம்.

நாளை வியாழன் 12-1-89 காலை 9 00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஞாபகார்த்த ஆராதனையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தாழ்மையுடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமகன்.

இராஜவீதி, அச்சுவேலி. (8837)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொம்பியூட்டர் கல்வி

யாழ்நகரிலேயே மிகத்தரமான முறையில்
I B M - PC, Apple II, Laser, Commodore Texas, Sharp Computer களில்
பயிற்சியளிக்கப்படுகின்றன.

Basic Programming Course
ஆரம்பம்: 14- 01- 1989
(1. 30. p. m. Weekend)
11. 01- 1989 (1. 30. p m Weekday)

I. D. P
Computer Centre
342, K. K. S. Road, Jaffna.

✶ மல்லாகம் கிளையிலும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

(8831)


# இலக்கிய விமர்சகர்களில் க.நா.சு முதன்மையானவர்

## பேராசிரியர் சிவத்தம்பியின் கருத்து

யாழ்ப்பாணம், ஜன. 11

இலக்கிய விமர்சகர்களில் க. நா. சு. முதன்மை பெற்றவர். நவீன தமிழ் இலக்கியங்களை மேற்கத்திய விமர்சனதரத்துக்கு ஏற்றவாறு எழுதும் முறையைக் கையாண்ட பெருமை இவரைச்சாரும். இவருடைய படைப்புக்கள் மார்க்சிஸக் கொள்கைக்கு எதிரானவைகளாக இருந்தன. ஆனால் அவர் தான் மார்க்சிஸவிரோதி அல்ல எனக் கூறிக்கொண்டார்.

பிரபல எழுத்தாளரும் இலக்கிய விமர்சகருமான அமரர்க. நா. சுப்பிரமணியத்தின் நினைவு தினக் கூட்டம் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளராக உரையாற்றும் பொழுது பேராசிரியர் கா. சிவத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டத்துக்கு திரு. எம், ஏ, நுஃமான் தலைமை வகித்தார்

பேராசிரியர் சிவத்தம்பி தனது உரையில் மேலும் கூறியதாவது.

''முப்பதுகளில் தமிழ் நவீன இலக்கியத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. தமிழ் இலக்கியங்கள்இக்காலத்தில் செழிப்பாக வளர்ந்துஇலக்கியங்களின்நிலைபாட்டையும் விமர்சனமுறையின் தன்மையையும் வெளிக்காட்டின. க. நா. சு. தன்னுடைய விமசர்சனங்களை ஆணித்தரமாகச் சொன்னார். அத்துடன் தமிழ்ப் பாரம்பரியக் கருத்துக்களையும் வலிமையாக எடுத்துரைத்தார். அவருடைய விமர்சனங்கள் எப்பொழுதும் கருத்துமிக்கவையாக இருந்தன.

விமர்சிப்பவர் பல மொழிகளைத் தெரிந்திருப்பவராக இருந்தால் அவரின் விமர்சனம் கருத்து நிரம்பியதாக இருக்கும். அந்த வகையில் க. நா. சு. ஒரு பன்மொழிப் புலவராக இருந்ததினால் அவரது விமர்சனம் கருத்துமிக்கதாக இருந்தது'' இப்படி அவர் கூறினார்:

திரு. எம். ஏ. நுஃமான் தனது உரையில் கூறியதாவது.

''அமரர் சுப்பிரமணியம் எழுதுவதையே தனது முழு நேரத் தொழிலாகக் கொண்டிருந்தார். இவர் நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் ஆகிய துறைகளில் பல நூல்களை எழுதியுள்ளார். இவர் ஐம்பதுக்கு மேலான நூல்களை வெளியிட்டுள்ளார்: அத்துடன் ஆங்கிலத்திலும் தமிழ் சிறுகதைகள் பற்றியும் இந்திய சிறு கதைகள் பற்றியும் பல நூல்களை எழுதியுள்ளார்இவர்ஏழு எட்டு மொழிகளில் வல்லவராயிருந்தார் நவீன ஆங்கில கவிஞர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். நவீன இலக்கிய வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பங்கு அளப்பரியது'' இப்படி அவர் கூறினார்.

கவிஞர் முருகையன், திருமதி சித்திரலேகா மௌனகுரு ஆகியோரும் க. நா. சு. வின் கவிதை நாடகச் சிறப்பியல்புகளை பற்றி உரையாற்றினர்.

(ச)

## பணம்-நகை கொள்ளை

கொழும்பு, ஜன 11

சடந்த வெள்ளிக்கிழமை திஸ்ஸமகரம பகுதியில் போதடகண்டிய, மாறைக, இக்கப்பல்லம ஆகிய இடங்களில் உள்ள கிராம வங்கிகள் மூன்றில் சுமார் 30 ஆயிரம் ரூபா பணம், நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன. (இ-எ)

## கல்விக் கழக பொதுக்கூட்டம்

கொக்குவில் ஜன 11

யாழ் பாலர் கல்விக் கழகத்தின் 13 ஆவது பொதுக் கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு கழகத் தலைவர் ஆ. செல்லையா தலைமையில் அரசடி வீதியில் அமைந்த பாலர் கல்விக் கழக தலைமை அலுவலகத்தில் நடைபெறும்.

(இ-69)

## குமாரசூரியர் மக்கள் கட்சியில்

கொழும்பு, ஜன. 11

சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் தபால். தந்தித் தொடர்புகள் அமைச்சராகப்பணியாற்றிய திரு. செல்லையா குமாரசூரியர் ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி வேட்பாளராக கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகிறார்.

திரு. குமாரசூரியர் அண்மையில் இலங்கை மக்கள் கட்சியில் சேர்ந்து இருந்தார். பின்னர் விலகி திருமதி சேனநாயக்கா தலைமையில் இயங்கி ஐக்கிய இலங்கை மக்கள் கட்சியில் சேர்ந்தார்.

(இ-எ)


## T. V. ரவல்ஸ் & ருரிஸ்ட்

பெருமையுடன் வழங்கும்
உடனடி வேலைவாய்ப்புகள்

சவூதி அரேபியா
SAUDI ARABIA ALRAJHI CO:

| | | |
|---|---|---|
| (1) ஸ்ரீல் பிற்றர் | சம்பளம் | 650 SR |
| (2) கூரை ஒடு பிற்றர் | ,, | 650 SR |
| (3) மேசன் | ,, | 650 SR |
| (4) தச்சு வேலையாட்கள் | ,, | 650 SR |
| (5) பிளம்பர்ஸ் | ,, | 650 SR |
| (6) டீசல் மெக்கானிக் | ,, | 650 SR |
| (7) பெற்றல் மெக்கானிக் | ,, | 650 SR |
| (8) சாரதிகள் H. V. | ,, | 650 SR |
| (9) ஒட்டோ எலக்ரிஷன் | ,, | 650 SR |
| (10) எலக்ரிஷன் | ,, | 650 SR |
| (11) மெக்கானிக் | ,, | 650 SR |
| (12) வெல்டர்ஸ் | ,, | 650 SR |
| (13) Civil Supervisor | ,, | 800 SR |
| (14) கிளினர்ஸ் 300பேர் | ,, | 490 SR |

தங்குமிடம் அளிக்கப்படும்.
Food allowance will be paid
வயதெல்லை (Age Limits) 21 — 48

குவைத்நாட்டில் வேலைவாய்ப்பு
300 கிளினர்ஸ் சம்பளம் 35 KD
வயதெல்லை 18 — 48 வரை
No Food தங்குமிடம் அளிக்கப்படும்

முக்கிய குறிப்பு:
எமது காரியாலயம் திறந்திருக்கும் நேரம் காலை 8.00 மணிமுதல் 5.00 மணி வரை
ஞாயிறு காலை8 00 மணிமுதல் 2 00மணிவரை

T.V. Travels & Tourist
BROWN ROAD,
(Railway Station Front)
KOKUVIL:

(C/1253)



## C.I.M.A. - Stage I - Batch No. II

May 1989
வாரநாள் புதிய பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம்:
18 th January 1989

உங்கள் பதிவுகளுக்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peters Lane,
Hospital Road,
JAFFNA.

C. I. M. A. Stage I, II & III A. A. T. Prelim, Inter &Finals I. D. P. M. Part I & II, I. A. B. all stages வகுப்புகளும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

(C/1222)



# "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

## நிலையானமுதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

### ஷப்ரு அன்பளிப்புக் கலண்டர்கள்

✶ பெரியஅளவில் - மாதம் ஒரு பக்கம் கொண்ட மூவர்ணக் கலண்டர்!
✶ ஜனவரி முதலாம் திகதிமுதல் விநியோகம்!!
✶ வாடிக்கையாளர்கள் எமது யாழ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### பணிப்பாளர் சபை

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன, சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. ஜே. டி. நவரட்ணம், (A. I. B. Lond.), பொது முகாமையாளர்
திரு. எஸ். பாலசுப்பிரமணியம், (A. I. B. Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஏ. எம். எச். பாரி, B. A. (Hons.)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 22073—24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு-4
தொலைபேசி: 583310, 500576


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SCIENCE CENTRE
KARAVEDDY

**A/L 89** பகல் நேர வகுப்பு

அலகு ரீதியான வினு விடை வகுப்பு

இரசாயனம் — Mr. Bar, இல்லைநாதன்
செவ், வியா, சனி 2-3
பௌதிகம் — வர்ணம்
திங் புதன், வெள்ளி 7-30 8-30
கணிதம் — நல்லையா
திங், புதன், வியா 9-11
விலங்கியல் — நாகநாதன்
வெள்ளி, 4-6
தாவரவியல் — குகாதரன்
செவ்வாய், 2-4

**ஆரம்பம்: 13-1-1989**
[வெள்ளி, 4-6 விலங்கியல்]
(C834)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## பதவி வெற்றிடம்

உதவி விடுதித் தலைவர் தரம் II (முழு நேரம்) - பெண் (தற்காலிகம்) பதவிக்கான விண்ணப்பங்கள் 1989 தைமாதம் 31ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

**பதவி:**
உதவி விடுதித் தலைவர் தரம் II (முழுநேரம்) பெண் தற்காலிகம்.

**சம்பள அளவுத்திட்டம்:**
ரூபா 2075/- (நிரந்தரம்) மாதம் ஒன்றிற்கு

**தகைமைகள்:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரி, விடுதிகளை நிர்வகிப்பதிலும், முகாமை செய்வதிலும் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**தெரிவு:**
நேர்முகப் பரீட்சைமூலம் நடைபெறும்.

**குறிப்பு**
தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி நியமிக்கப்படும் விடுதியில் வசித்தல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்காகத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரியின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்தில் எடுத்துப் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

— பதில் பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1989-01-06. (C/ 1277)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**முத்துவேல் சபாரத்தினம்**

தோற்றம்: 10 - 4 - 1942 | மறைவு: 13 - 12 - 1988

திதி: 12. 1. 1989

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் எமது இல்லத்தில் நாளை நடைபெற இருக்கும் அந்தியேட்டி வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரிகள், மச்சான்,
மருமக்கள், பெருமக்கள்,
குடும்பத்தினர்.

சாந்தா விலாஸ்,
(ரொட்டிக் கடை)
சந்தி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (8833)


**1983 வெலிக்கடைக் கொலை:**

# தங்களாலியன்ற அளவு தடுக்க அதிகாரிகள் முயன்றனராம்

## நஷ்டஈட்டு வழக்கில் அரச சட்டத்தரணி வாதம்

கொழும்பு, ஜன. 11
வெலிக்கடைச் சிறைக் கலவரத்தைத் தடுக்க அதிகாரிகள் தங்களாலானமட்டும் முயன்றனர். ஆனால் நிலைமை கட்டுக்கடங்காமற் போய்விட்டது.

இப்படி சிரேஷ்ட அரச சட்டத்தரணி திரு. எஸ். மர்சூக் தெரிவித்தார்.

1983 கலவரத்தின் வெலிக்கடைச் சிறையில் தமிழ்ப் போராளிகளான குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உட்பட 52 பேர் கொல்லப்பட்டனர் அல்லவா?

அச்சம்பவம் தொடர்பாக உயிரிழந்தவர்களில் 31 பேரின் உறவினர்கள் அரசிடமிருந்து நட்டஈடு கோரித் தொடர்ந்த 31 வழக்குகள் கடந்த வியாழக்கிழமை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

'பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் உயிரிழந்த அனைவரும் கைதுசெய்யப்பட்டு அரசின் பாதுகாப்பின்கீழ் அரசுச்சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர், அவர்களின் உயிருக்குப் பாதுகாப்பு வழங்குவது அரசின் பொறுப்பு ஆகும்.

'வெலிக்கடைச் சிறைச்சாலையில் சட்டம், ஒழுங்கு குலைந்ததனால் கைதிகளாக இருந்த அவர்கள் கொல்லப்பட்டனர்.

அதற்கு அரசே பொறுப்பு ஏற்கவேண்டும்—இப்படி மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சிரேஷ்ட அரச சட்டத்தரணி எஸ் மர்சூக் வாதாடுகையில் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தீவிரவாதச்செய்கைகளில் ஈடுபட்டோரைக் கைதுசெய்து சிறையில் அடைத்து நாட்டின் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதன்மூலம் அரசு தனது கடமையைச் செய்கிறது.

1988இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தண்டனை தவிர்ப்புச் சட்டம் 1-8-1977 முதல் 16-12-1988 வரை அரசு அதிகாரிகள் செய்த நடவடிக்கைகளுக்குத் தண்டனை வழங்குவதைத் தவிர்க்கிறது.

இச்சிறைக்கலவரத்தைத் தடுக்க அதிகாரிகள் தங்களாலான மட்டும் முயன்றனர். ஆனால் நிலைமை கட்டுக்கடங்காமற்போய்விட்டது.

இப்படி சிரேஷ்ட அரச சட்டத்தரணி எஸ். மர்சூக் தெரிவித்தார்.

வழக்கு விசாரணை வருகிற பெப்ரவரி மாதம் 2ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

மனுதாரர்கள் சார்பில் வழக்கறிஞர்கள் சாம் கதிர்காமர், டெஸ்மண்ட் பெர்னாண்டோ, திருமதி சூரியா விக்கிரமசிங்கா ஆகியோர் ஆஜரானார்கள். (இ-எ)

## ஹாட்லியின் சாதனை

பருத்தித்துறை ஜன 11
பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் 150 வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்படும் இவ்வேளையில் பல இன்னல்கள் வசதிக்குறைவுகளின் மத்தியில் ஜி. சி. ஈ. சாதாரணதர பரீட்சையிலும், ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையிலும் பல அரிய சாதனைகளைக் ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் நிலைநாட்டி வருகின்றனர் குறிப்பாக அண்மையில் வெளியான ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையில் வர்த்தகப்பிரிவில் 4 ஏ எடுத்து அகில இலங்கையிலும் முதன் மாணவனாக செல்வன் வி. நித்தியானந்தன் சித்தியடைந்தமை ஹாட்லியின் தொடர்ச்சியான சாதனைக்கு ஓர் எடுத்துக்காட்டு''

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் சட்டத்தரணி திரு. இ. உருத்திரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

''வழமையாக பொறியியல்பிரிவுமருத்துவபிரிவு மாணவர்கள் ஏற்படுத்தி வந்த சாதனையை இம்முறை வர்த்தக பிரிவு மாணவர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

இன்று மாணவர்கள் மத்தியில் வர்த்தகப் பாடங்களைக் கற்பதில் ஆர்வம் ஏற்பட்டு வருகிறது.

கலைப்பிரிவுப் பாடங்களை கற்பதற்கும் மாணவர்கள் ஆர்வங்காட்ட வேண்டும்.

எமது கல்வித்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகம் புகும் மாணவர்களின் 5 சத வீத மாணவர்களே தெரிவு செய்யப் படுகின்றனர்:

ஏனையவர்கள் ஜி சி ஈ உயர்தரம் வரை கற்றுவிட்டு வீட்டில் இருக்கின்றனர்.

இந்நிலைமாறி மாணவர்கள் தொழிற்கல்வி கற்க ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும்'' இப்படி அவர் கூறினார் (இ118)

## உருத்திரபுரத்தில் நடந்த 20 'ஓவர்' கிரிக்கெட்டில்
## அருணோதயா சாம்பியன்

வட்டக்கச்சி ஜன 11
கிளிநொச்சியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. யோ. சகாயதாசன் அவர்களின் ஞாபகார்த்தமாக 20 ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று உருத்திரபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியை உருத்திரபுரம் மகாவித்தியாலய அதிபர் திரு. கா. நாகலிங்கம் ஆரம்பித்து வைத்தார்.

போட்டியில் அருணோதயா விளையாட்டுக்கழகம் முதலாமிடத்தைப் பெற்று சம்பியனானது

இரண்டாம் இடத்தை பரந்தன் விளையாட்டுக் கழகம் பெற்றது

மூன்றும் இடத்தை விஞ்ஞானக்கல்வி விளையாட்டுக் கழகம் பெற்றது.

இப்போட்டியில்சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரியும் சமாதான நீதிவானுமான டாக்டர் திரு கே. கே. திருலோகமூர்த்தி கலந்துகொண்டார்.

சம்பியனான விளையாட்டுக் கழகத்தைப் பாராட்டிஅவர் பேசினார்

இம்மாவட்டத்தில் ஏழு கழகங்கள் பங்குபற்றிய முதலாவது கிரிக்கெட் போட்டி இது தான் என்று அவர் கூறினார்.

இன்றைய சூழ்நிலை காரணமாக பரிசளிப்பு ஒத்திவைக்கப்பட்டதாக அதன் அமைப்பாளர் திரு. யே. ஜே. சயேசுதாசன் தெரிவித்துள்ளார். [இ- 163]

## பயிற்சி நெறிக்குத் தெரிவான கணித—விஞ்ஞான ஆசிரியர்கள்

(நேற்றைய தொடர்ச்சி)
வி. நித்தாஞ்சனி, (நிரஞ்சனி), கரவெட்டி; எம் பாமா, வல்வெட்டித்துறை; பீ. தவரஞ்சினி, சுன்னாகம்; பீ நடராசா, புங்குடுதீவு; எம். கோகுலவாணி, மீசாலை தெற்கு; ரி. சகுந்தலா தேவி, புலோலி தெற்கு; எஸ் ஞானமலர், அச்சுவேலி; எஸ் கிருபாகரன், வேலணை வடக்கு; என். ஆதிரை, கரவெட்டி மத்தி; வீ சிவமலர், அச்சுவேலி; கே செல்வபாக்கியம் அச்சுவேலி; ரி. சர்வேஸ்வரன், கோபாய்; எஸ் சுமதி, பருத்தித்துறை; எஸ் குகன், பருத்தித்துறை.

கே. சத்தியதாசன், மாவிட்டபுரம்; ஆர். சரோஜினி, காரைநகர்; வை ஜெகானந்தன், யாழ்ப்பாணம்; கே ஜெயராணி, யாழ்ப்பாணம்; கே. கலைச்செல்வி, அச்சுவேலி; எம். சுதாமதி, சரசாலை வடக்கு; ஆர். தர்மதேவன், சுன்னாகம் கிழக்கு; ஆர். அரியதாசன், மூளாய் தெற்கு; வீ கே. இரவீந்திரராசா, மீசாலை தெற்கு; எஸ் இரதிதேவி, சாவகச்சேரி; பி. சாந்தினி, ஆவரங்கால் மேற்கு; ஜே. ஜயந்தி சரவணை கிழக்கு; ஆர். இரத்தினபூபதி காரைநகர்; ஜே சி வி. கிதெபொன் கலன், 4ம் வட்டாரம், மண்டைதீவு; எம். தேவசுதன் மாவிட்டபுரம்; எம். தவனேஸ்வரி, சுரணவாய் வடக்கு; எஸ் பத்மநாதன், கொடிகாமம்; வீ சுலோசனா, யாழ்ப்பாணம்; ஏ நொயலின் ஜயமதி, யாழ்ப்பாணம்; வை இராஜனி, சித்தன்கேணி; ஆர். பன்மதராசன், புங்குடுதீவு-1; பீ. நாகரஞ்சனி, இணுவில், கே கமலநாயகி, அரியாலைமேற்கு, எம். மேரி இரஞ்சனி, பருத்தித்துறை.

என். பீ குகதாஸ், புலோலி தெற்கு; பீ. சாரதாமணி, கொட்டடி; ஏ. சில்வியா, பண்டத்தரிப்பு; பீ. இரத்தினமலர், பருத்தித்துறை; பீ. ஜெயராணி, பருத்தித்துறை; எம். ஜெயந்தி, கொக்குவில்; கே. சகுணலதா, கோண்டாவில் கிழக்கு.

**கொழும்பு**
என். ஜெயசௌரி, இணுவில் மேற்கு

**முல்லைத்தீவு**
எஸ். சிவநேசன், முள்ளியவளை; எஸ். பலர்விழி துணுக்காய்; எஸ். ஜெயந்தி சுதந்திரபுரம், என். சர்வேஸ்வரநாதன் புதுக்குடியிருப்பு; என். சிவயோகமலர், துணுக்காய்; ரீ சுலைச்செல்வன், துணுக்காய்; ஆர். சித்திரா, முள்ளியவளை; எஸ். சோமபதி, முள்ளியவளை; எஸ். எஸ் புஷ்பராணி, முள்ளியவளை.

**கிளிநொச்சி**
எஸ். யோகரஞ்சிதம், வட்டக்கச்சி; என், புஸ்பராணி வட்டக்கச்சி; எஸ். சுலோசனா வட்டக்கச்சி; என். நடேசமூர்த்தி, பூநகரி; கே. விஜயகுமார் பளை; ரி. ஜலஜா, கிளிநொச்சி; ஜி. ரவிக்குமார், முரசுமோட்டை; கே. சரோஜினி, இராமநாதபுரம்:

**மன்னார்**
என். தனேஸ்வரி, மன்னார். (இ-10)
[முற்றும்]

## திருவாசக முற்றோதல்

சுழிபுரம், ஜன 11
திருவாசகம் முற்றும் ஓதும் வைபவம் ஒன்றை பண்ணாகம் சத்சங்க வட்டத்தினர் நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

எதிர்வரும் தைப் பொங்கலுக்கு அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை காலை ஆறுமணி முதல் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலயத்தில் இந்நிகழ்ச்சி நடைபெறும் (இ-28)

## சனசமூக நிலைய பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ஜன 11
சனசமூக நிலையப் பிரதிநிதிகளுக்கான சமூக சேவைப் பயிற்சிக் கருத்தரங்கும் வகுப்பும் இம்மாதம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள பிரெஞ்சு நட்புறவுக் கழகப் பணிமனையில் நடைபெறும்.

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியம் இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்கின்றது.

இதில் பங்குபற்ற விரும்புவோர் ஒன்றியத்தின் பணிமனையில்தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு இணைச்செயலாளர்களால் வேண்டிக் கொள்ளப்படுகின்றார்கள். [ச]

## தபால் மூல வாக்களிப்பு

யாழ்ப்பாணம் ஜன 11
நடைபெறவிருக்கும நாடாளுமன்றப்பொதுத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான இறுதித்திகதி இம்மாதம் 16 என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தபால் மூலம் வாக்களிப்பதற்கான இறுதித் திகதி 3 என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (இ-5)

## புளியங்கூடலில் துப்புரவு

ஊர்காவற்றுறை ஜன11
ஊர்காவற்றுறை தொகுதியில் உள்ள பிரதான சந்தியான புளியங்கூடல் சந்திக்கு அருகில் உள்ள பிட்டிகளில் உள்ள மண் செடி கொடிகள் அனைத்தும் வெட்டப்பட்டு துப்புரவாக்கப்பட்டு வருகின்றன.

இப் பிரதான சந்தியானது மழை காலங்களில்வெள்ளக்காடாகக் காட்சி அளித்து வந்தது

இப்போது மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலையினால் மழை நீர் தேங்கி நிற்காமல் வெளியேறக் கூடியதாயிருக்கிறது. (ச-16)

## நெடுந்தீவு வீதி

நெடுந்தீவு ஜன 11
நீண்ட காலமாகத் திருத்த வேலைகள் எதுவும் இடம் பெறாத நிலையில் நெடுந்தீவு பிரதான வீதி குன்றும் குழியும் நிறைந்து வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் உள்ளது (ச-111)


கரப்பந்தாட்ட
## சுற்றுப் போட்டி

**நொதேண்ஸ் விளையாட்டுக்கழகம்**
நடாத்தும்
ஆறுபேர் கொண்ட (ஓவர்சேம்) முறையிலான கரப்பந்தாட்ட போட்டிகள்
21 - 01 - 1989 சனிக்கிழமை
ஆரம்பமாக உள்ளது.

இதில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் 16-1-1989 க்கு முன் தங்கள் விண்ணப்பங்களை
இணைச் செயலாளர்கள்,
ப. திருமாறன், ஐ. சிவரெத்தினம்,
388/4, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இப்போட்டிகள் யாவும் யாழ் கரப்பந்தாட்ட சங்கத்தினரின் அனுசரணையுடன்
செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | 500. 00 | ரூபா |
| இரண்டாம் பரிசு | 250 00 | ரூபா |
| திறம் ஆட்டக்காரன் | 100. 00 | ரூபா |

விளம்பர அன்பளிப்பு:
**கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்**
161, K. K S வீதி,
யாழ்ப்பாணம்.
(8657)



## முதல் வருட ஞாபகம்
1989 - 01 - 12



**ஜோர்ட்ஜ் யோசப்**


பிறப்பு: 1913 08. 25 | இறப்பு: 1988. 01. 12

ஆன்ம இளைப்பாற்றிக்கான திருப்பலிப் பூசை 1989-01-12 காலை 6. 15 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் இடம் பெறும்.

— மகன் குடும்பத்தினர்
[8822]



## 31st REMEMBRANCE



IN UNDYING MEMORY OF OUR BELOVED PAPPA
SIMON RAJARATNAM GEORGE
**Born on 19th September 1922**
**Called to rest on 10th December 1988**

Pillar of our home, light of our life
A beautiful life you will have spent
Your loved ones remain to sing your praise
A Tender thought still brings a tear
A Loving wish that you were here
We knew not you were passing by
Without a farewell or good-bye!

Our sincere thanks to all those who attended the funeral, sent floral wreaths, Cards and telegrams of sympathy in our bereavement.

Sadly missed and fondly remembered by
**Daughter, Son, Son-in-law and Grand children.**
(1242)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் திருமுகம்

யாழ் ஆஸ்பத்திரி 5 மாடிக் கட்டடம்:

# அரச அதிபரின் அறிக்கைக்கு திட்ட முகாமையாளர் பதில்

யாழ் போதனா வைத்தியசாலையில் எழுப்பப்பட்டு வந்த வசதிமிக்க கட்டடத்தின் அமைப்பு வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ள பரிதாபகர நிலைமையை பொதுமக்களுக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் எடுத்துக்காட்டி இவ்வேலை தொடர்பாக இவ்வளவு காலமும் மௌனம் சாதித்து வந்த யாழ் செயலகத்தினை பேசவைத்த பத்திரிகை உலகிற்கு எங்கள் நிறுவனம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

27-12-1988 உதயன் பத்திரிகையில் வெளிவந்தவாறு யாழ் ஆஸ்பத்திரிக்கு கட்டட வேலைக்காக கிடைக்க இருந்த நிதி பறிபோனது என்பது உண்மையே. இது தொடர்பாக யாழ் வைத்திய அத்தியட்சகரும் நாமும் எமது உண்மை நிலைகளை வெளிப்படுத்தினோம். இதைத் தொடர்ந்து யாழ் அரசாங்க அதிபர் தமது அறிக்கைமூலம் வீதிகளைப் புனரமைப்பதற்கும் வேறு அவசரமான வேலைகளுக்கும் நிதி பயன்படுத்தப்பட்டு விட்டது எனக் கூறி மேற்கூறிய கூற்றினை மறைமுகமாக நிலைநிறுத்தியுள்ளார்.

யாழ் அரசாங்க அதிபரின் கூற்றுப்படி எமது நிறுவனத்திற்கு 1987ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரையில் செய்து முடிக்கப்பட்ட வேலைகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு விட்டது என்பது எமது ஸ்தாபனத்திற்கு சிறிது களங்கத்தை ஏற்படுத்துவதாகத் தெரிகின்றது. 1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை செய்யப்பட்டு வந்த வேலைகளின் நிமித்தம் வழங்கப்படவேண்டிய மிகுதிகொடுப்பனவில் முற்பணமாக ரூபா பத்து லட்சமே 1987 டிசம்பரில் வழங்கப்பட்டது. அதற்கு நன்றியுடையவர்களாக இருக்கும் அதே வேளையில் எம்மால் சமர்ப்பிக்கப்பட்டு யாழ் கட்டடத் திணைக்களத்தினால் பரிசீலிக்கப்பட்டு சிபார்சு செய்யப்பட்ட கடைசி இடைக்கால (கொடுப்பனவு) சிட்டுகள் மூலம் எமக்குச் சேரவேண்டிய கொடுப்பனவுகள் முற்றாக வழங்கப்படவில்லை என்பதைத் தாழ்மையுடன் அறியத்தர விரும்புகின்றேன்.

மேலும் இக்கட்டட வேலைகளை இவ்வாண்டு திரும்ப ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக அறிந்து எமது நிறுவனம் சார்பில் நன்றியையும் கூறுகின்றேன். அரசாங்க அதிபர் இம்முறையாவது இந்நிதி வேறு "அவசரமான வேலைகளுக்கு" பறிபோகாமல் ஆவன செய்தால் யாழ் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இக்கட்டடத்தை மிக விரைவில் கட்டி முடித்து அவர்களுக்கு சமர்ப்பணம் செய்ய ஆவலாயுள்ளோம்.

சி. உருத்திரலிங்கம்,
திட்ட முகாமையாளர்.

சமக்கோன் நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

## ஒரு நல்ல அறிகுறி

கிளிநொச்சிப் பகுதிக்கு பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்திலிருந்து மின்சாரம் வழங்கப்படுகிறது. மின்சாரத்தை கிளிநொச்சி பட்டினப் பகுதிக்கு மட்டுமல்லாமல் கிளிநொச்சியின் மற்றைய பகுதிகளுக்கும் வழங்கக்கூடிய இயந்திரங்கள் தொழிற்சாலையில் அமைந்துள்ளன.

இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்களது கடின உழைப்பாலும் கிளிநொச்சிப் பகுதி அரச மின்சார சபை ஊழியர்களது ஒத்துழைப்பாலுமே இன்று கிளிநொச்சிப் பகுதிக்கு வெளிச்சம் கிடைக்க வழி பிறந்தது.

இந்த மின்சாரத்தைப் பெறுவதற்கு கிளிநொச்சிப் பொலீஸ் பகுதியும் அமைதிப்படையினரும் உதவிகளைச் செய்தனர். அதி முக்கியமாக யாழ்ப்பாணம் மில்க்வைற ஸ்தாபனத்தார் வழங்கிய 'எயர் கொம்பிறஸ்' இயந்திரம் எமது இயந்திரத்தை இயக்கக் கூடியதாக இருந்தது.

ஆகவே இன்று கிளிநொச்சி நகரம் பூரண வெளிச்சம் பெற்றுள்ளதால் மில்க்வைற் ஸ்தாபன உரிமையாளர் திரு. க. கனகராஜா அவர்களுக்கும் கிளிநொச்சி பொலீஸ் உத்தியோகத்தர், அமைதிப் படை அதிகாரிகள் அனைவருக்கும் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன நலன்புரி உத்தியோகத்தர் மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கின்றனர்.

முக்கியமாக 1985 ஆம் ஆண்டு தொடக்கம் இக் கூட்டுத்தாபனம் இயங்காமல் இருந்தது. இதனால் தற்போது இயங்கக்கூடிய நல்ல சூழ்நிலை தோன்றியுள்ளது.

மேலும் இக் கூட்டுத்தாபனம் புனரமைக்கப்பட்டு தொழிற்சாலை உற்பத்தியை ஆரம்பிக்க நல்ல அறிகுறிகள் தோன்றியதையிட்டு தொழிற்சாலை ஊழியர்கள் மிகவும் சந்தோஷப்படுகின்றார்கள்.

நலன்புரி உத்தியோகத்தர்.
பரந்தன் இரசாயனக்
கூட்டுத்தாபனம்.

## கிளிநொச்சியில் கொடுப்பனவு ஆரம்பம்

வட்டக்கச்சி ஜன 11

கிளிநொச்சி இலங்கை வங்கி கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதல் முறையாகப் பணம் வழங்கியது.

கிளிநொச்சி நகர எல்லைக்குள் கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் சுமார் 850 குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. கிளிநொச்சி பொலீஸ் நிலைய வளவில் உள்ள வங்கிக் கட்டடத்தில் வைத்தே நிவாரணம் வழங்குவதாக முன்னர் முடிவெடுக்கப்பட்டிருந்தும் பொதுமக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு கரடிப்போக்கில் அமைந்திருக்கும் நிரந்தர வங்கிக் கட்டடத்தில் வைத்தே பணம் வழங்கப்பட்டதாக கிளிநொச்சி இலங்கை வங்கி முகாமையாளர் திரு. பெரியதுரை தெரிவித்தார். (இ-163)

# வல்லிபுரக் கோயில் பிரதேசம் கடலுக்கு இரையாகும் ஆபத்து

## மணல் அள்ளுவது தடுக்கப்பட வேண்டும்

யாழ்ப்பாணத்தின் கிழக்குப் பாகத்தில் அமைந்திருக்கும் வல்லிபுரக் கோயில் பிரதேசத்திலிருந்து தினமும் பெருமளவு மண் வெளியே எடுத்துச் செல்லப்படுகின்றது.

இதனால் வல்லிபுரக் கோயில் பகுதி மணல் அருகி இப் பிரதேசத்துக்கு பாரிய சேதம் ஏற்படும் நிலைமை உள்ளது.

ஆசியாவிலேயே மிகச் சிறந்ததும் இயற்கையால் சுத்திகரிக்கப்பட்டதுமான படிக மணல் (சிலிக்கா மணல்) இருப்பது வல்லிபுரக் கோயில் பிரதேசத்தில் தான்.

20 ஆண்டுகளுக்கு முன்பு வெளியான "தென்கிழக்காசியாவின் கனிய வளப்பயன்பாடு" என்ற அறிக்கை இவ்வாறு கூறியது. இது போன்ற சிறந்த மணல் இருக்கும் இன்னொரு நாடு ஆசியாவில் தாய்லாந்து மட்டுமே.

### பொருளாதாரத்தின் மூல வேர்

வல்லிபுரக் கோயில் மணல் எதிர்காலத்தில் எமது பொருளாதாரத்தின் மூலவேர்களில் ஒன்றாக இருக்கக்கூடியது. இந்த மணலைப் பயன்படுத்தி பல கைத்தொழில் மையங்களை உருவாக்க முடியும்.

ஆனால் இந்த மணல் நாளுக்கு நாள் கரைந்து கொண்டே போகிறது.

சராசரி ஒரு நாளில் மட்டும் 40 லொறிகளிலும் 185 உழவு இயந்திரங்களிலும் வல்லிபுரக் கோயில் மணல் ஏற்றப்பட்டு துன்னாலை, வரணி, மந்திகை, புலோலி, பருத்தித்துறை ஆகிய இடங்களினூடாக வெளியூர்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது.

மணல் ஏற்றும் வாகனக்காரர் போட்டியிட்டு ஒருவரையொருவர் முந்திக்கொண்டு மணலை அள்ளிச் செல்கின்றார்கள்.

### மறைந்த மணல்பிட்டிகள்

கால் நூற்றாண்டுகளுக்கு முன்னர் எமது முதியோர் கண்ட இரண்டு மணற் பிட்டிகள் இப்பொழுது இருந்த இடம் தெரியாமலே மறைந்துவிட்டன. இன்னும் இருப்பது இரண்டு மணற் பிட்டிகள்தான். ஆனால் மணல் ஏற்றும் வேகத்தைப் பார்க்கும் போது இவையும் எத்தனை காலம்தான் நின்று பிடிக்கப்போகின்றன?

வீடு, கட்டடம், தொழிலகங்கள் கட்டுவதற்கு மட்டுமல்ல அழகுக்கும் அலங்காரத்துக்குக்கூட மணல் ஏற்றிச் செல்லப்படுகின்றது. திருமணவிழா, பூப்புனித நீராட்டுவிழா, கோயில் திருவிழா, கலைவிழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளிலும் இம் மணலை தெருவிலும் முற்றத்திலும் கொட்டிப் பரவுவதைக் காணலாம்.

வல்லிபுரக் கோயில் மண் இவ்வாறு தொடர்ந்து விரயமாக்கப்பட்டால் வல்லிபுரக் கோயில் தீர்த்தத் திருவிழாவிற்கு நாங்கள் கடலை நோக்கி போகவேண்டிய அவசியம் ஏற்படாது அந்தக் கடலே கோயில் நோக்கி மிக அண்மைக்கு வந்துவிடும்!

இன்றைய சூழ்நிலையில் வல்லிபுரக் கோயில் மணற் பிரதேசத்தைப் பாதுகாக்க தற்காலிக நடவடிக்கைகளையாவது எடுக்க வேண்டும். சமூகத்தில் உள்ள சங்கங்கள், ஸ்தாபனங்கள் ஆகியன ஒன்று சேர்ந்து மண் ஏற்றிச்செல்வதைக் கட்டுப்படுத்தவேண்டும். ஆடம்பரத் தேவைகளுக்காக மண் ஏற்றுவதைக் கட்டாயம் தடைசெய்ய வேண்டும்.

### கடலுக்குள்

வல்லிபுரக் கோயிற் பிரதேச மண்ணைக் காக்க நாம் முன்வராவிட்டால் எமது எதிர்காலச் சந்ததிக்கு தீங்கு செய்தவர்கள் ஆவோம். அது மட்டுமல்ல காலப்போக்கில் 'வல்லிபுரம்' என்ற பகுதியே கடலுக்குள் மூழ்கிவிடுவதைத் தடுக்க முடியாது போய்விடும். ஆகவே நாம் திட்டமிட்டு வெள்ளம் வரு முன்னர் அணை கட்ட வேண்டும். (சு)

வீ. கே. ஸ்ரீசந்திரா,
செயலாளர்,
கிராம முன்னேற்றச் சங்கம்,
துன்னாலை.

## பத்மநாபா மீது குற்றம் சுமத்துவதா?
### மேல் நீதிமன்றம் கேள்வி

கொழும்பு, ஜன 11

அரசுக்கு எதிராகச் சதி செய்த வழக்கில் எட்டாவது சந்தேக நபரான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தலைவர் கே. பத்மநாபாவுக்கு எதிராக தொடர்ந்து குற்றம் சுமத்துவதா?

இதுபற்றி முடிவு செய்து அறிவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு எச். டபிள்யூ சேனநாயக்கா சட்டமா அதிபருக்கு கடந்த வாரம் பணிப்புரை விடுத்தார்.

இந்த வழக்கில் 23 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. ஆனால் கே. பத்மநாபா, இக்பால் ஆகிய இரு சந்தேக நபர்கள் தவிர்ந்த ஏனையோருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அரசதரப்பு வாபஸ் வாங்கி விட்டது.

திரு. பத்மநாபா ஆயுத நடவடிக்கைகளைக் கைவிட்டு, ஜனநாயக அரசியலுக்குள் பிரவேசித்து வடக்கு - கிழக்கு நிர்வாக நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்டிருக்கிறார். இந்த நிலையில் நீதிமன்ற நேரத்தையும், பணத்தையும் செலவிட்டு இந்த வழக்கை நடத்துவது பலன் அற்றது இப்படி நீதிமன்றத்திற்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

அதையடுத்து இது குறித்து முடிவு செய்து எதிர்வரும் 13 ஆம் திகதி பதில் அளிக்குமாறு சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் பணிப்புரை விடுத்தது.

இந்த வழக்கில் பத்மநாபாவுக்கு எதிராக 14 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கின்றன. (உ)

## சமய நிகழ்ச்சிகளில்

### நடைபஜனை

சுழிபுரம், ஜன. 11

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் மார்கழிமாத நடைபஜனை 8ஆம் திகதி நடைபெற்றது.

பொன்னாலையில் ஆரம்பமாகி வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, தொல்புரம், சுழிபுரம், மூளாய் ஆகிய இடங்களின் வீதிவழியாக பஜனைக் கோஷ்டியினர் கண்ணன் பாடல்களைப் பாடிக் கொண்டு கோவிலைச் சென்றடைந்தனர். (க-28)

### அர்ச்சனை

சுழிபுரம், ஜன. 11

சுழிபுரம் பத்திரகாளி கோயில் ஏகதின இலட்சார்ச்சனை 25ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

கோயில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ ச. வரதராஜக்குருக்கள் தலைமையில் அர்ச்சனைகள் நடைபெறும்.

கோயில் பரிபாலன சபையினர் சகல ஏற்பாடுகளையும் செய்து வருகின்றனர்.

தூர இடங்களில் இருந்து வரும் அடியார்களின் வசதிக்காக அர்ச்சனை அதிகாலையிலேயே ஆரம்பமாகி நடைபெறும். (க-28)

## "கொலையும் சித்திரவதையும் கடவுளுக்கு எதிரானவை"

மனிதகொலை, சித்திரவதை, சிறைப்படுத்தல் ஆகிய செயல்கள் கடவுளுக்கு எதிரானவை. மனிதனின் கோழைத்தனத்தினால்; பழிவாங்கல் எண்ணங்களினால் இந்த மண்ணை மனிதன் மாசுபடுத்திக்கொண்டிருக்கிறான்.

"பாக்ஸ் கிறிஸ்ரி"யினால் ஒழுங்கு செய்யப்பட்ட கடந்த வருடத்திற்கான செபவழிபாடும், 'யூபிலி' செய்தியும் நிகழ்ச்சியில் கலந்து பேசுகையில் வண. பிதா. ஆர். ஜே. ஈ. ஜெயசீலன் அடிகளார் மேற்கண்டவாறு சொன்னார்.

யாழ். புனித மரியாள் (அடைக்கலமாதா) கோவில் மறை பரப்பு மண்டபத்தில் மேற்படி நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து ஜெயசீலன் அடிகளார் பேசுகையில்,

"யூபிலி என்றால் என்ன? ஐம்பது வருடங்களுக்கு முன்னர் வாங்கியவைகளை வாங்கியவிலைக்குத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள், உங்களிடம் உள்ளதை விற்று ஏழையின் வயிற்றை நிரப்பி விடுங்கள் என்றால் ஆடம்பரமாக யூபிலியைக் கொண்டாடுவதனால் மனிதன் ஆனந்தமடைகின்றானே யானால் அது யூபிலியின் மகத்துவத்தை மாசுபடுத்துகின்றது"

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ 51)

## தீவுப் பகுதிக்கு இரண்டு தண்ணீர் பவுசர்கள்

ஊர்காவற்றுறை ஜன 11

குடி தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் தண்ணீர் விநியோகிப்பதற்காக தீவுப் பகுதியின் இரண்டு உள்ளூராட்சிச் சபைப் பிரதேசங்களுக்கு தண்ணீர் பவுசர்கள் வழங்கப்பட்டுள்ளன.

புனர்நிர்மாண அமைச்சு இந்த பவுசர்களை வழங்கியுள்ளது.

பவுசர்களை கையளிப்பது தொடர்பான வைபவம் யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் இடம்பெற்றது.

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கான பவுசரையும் உழவு இயந்திரத்தையும் அதன் விசேஷ ஆணையாளரும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ். எஸ். சிவரத்தினம் அரச அதிபரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

புங்குடுதீவு பிரதேச சபை உப அலுவலகத்துக்கான பவுசரையும் உழவு இயந்திரத்தையும் பொறுப்பதிகாரி திரு. கே. வயிரமுத்து அரச அதிபரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

ஏற்கனவே இவ்விரு அலுவலகங்களிலும் இருந்த அதி நவீன தண்ணீர் பவுசர்கள் கடந்த கால அசம்பாவிதங்களின் போது சேதமாக்கப்பட்டதும் —

இதனால் ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய இடங்களில் உள்ள பொதுமக்கள் குடி தண்ணீர் பிரச்சினையை எதிர்நோக்கியதும் தெரிந்தவையே. (ச-16)

ஒட்டுசுட்டானில்

## வீட்டுத் தோட்டப் போட்டி
### 250 செய்கையாளர் பங்குபற்றினர்

யாழ்ப்பாணம் ஜன 11

ஒட்டுசுட்டான் கமநலச் சேவைப் பிரிவில் இருந்து 250 தோட்டச் செய்கையாளர்கள் வீட்டுத் தோட்டப் போட்டியில் பங்கு பற்றினார்.

ஒட்டுசுட்டான் கமநலச் சேவைப் பிரிவில் இருந்து இம் முறை பெருப்பாலான செய்கையாளர்கள் இப் போட்டியில் ஈடுபட்டுள்ளனர் என்று கமநல சேவை நிலைய பெருத்பாக உத்தியோகஸ்தர் செல்வி எஸ். இராமலட்சுமி தெரிவித்தார்.

வீட்டுத் தோட்டப் போட்டியில் ஈடுபட்டுள்ள செய்கையாளர்களுக்கு கமநலச் சேவை [illegible] விதைகள் பழமரக்கன்று [illegible] என்பனவற்றையும் வழங்கி வருகிறது.

வீட்டுத் தோட்டப் போட்டியில் பங்கு பற்றியவர்களுடைய தோட்டங்களை மதிப்பீடு செய்யும் பணி அண்மையில் தொடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இம் மதிப்பீட்டுக் குழுவில் விவசாயப் போதனாசிரியர்கள் திரு. ரி. பஞ்சாட்சரதேவன் திருமதி ந. பரமநாதன், விவசாய முகாமையாளர் திரு. ந. செல்வராசா ஆகியோருடன் செல்வி எஸ். இராமலட்சுமியும் இடம்பெற்றுள்ளனர். (இ-10)

## பொறுமை வாய்ந்த இரு பெரியோர்

\- புத்தொளி -

சாக்கிரட்டீஸ் ஒரு தத்துவ மேதை. ஆபிரகாம்லிங்கன் ஓர் அரசியல் மேதை. ஆனால் இருவருக்கும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. கிறிஸ்துவுக்குமுன் 469ஆம் ஆண்டில் பிறந்த சாக்கிரட்டீசுக்கும், கிறிஸ்துவுக்குப் பின் 1709இல் பிறந்த ஆபிரகாம்லிங்கனுக்கும் அவர் தம் வாழ்க்கைத் துணைவியரைப் பொறுத்தளவில் ஒற்றுமை இருக்கிறது.

சாக்கிரட்டீசின் மனைவி மகா கோபக்காரி. சாக்கிரட்டீஸ் ஒருநாள் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அவருடைய மனைவிக்கு அது பிடிக்கவில்லை. "நீங்கள் என்னைக் கவனிப்பதில்லை. எந்நேரமும் தியானம்தான் உங்களுக்குப் பெரிதாயிருக்கிறது" என்று குற்றப்பத்திரிகை வாசிக்க ஆரம்பித்துவிட்டாள். அவள் சொல்வதைக் கணவர் காதில் வாங்கிக்கொள்வதாக இல்லை. தியானம் முடியும்வரை பொறுத்துக்கொள்ளும்படி சைகை காட்டினார். ஆனால் அவள் விடவில்லை.

வாயில் வந்தபடி வசைபாடினாள். தான் பேசிக்கொண்டிருக்க சாக்கிரடீஸ் தியானத்தில் ஆழ்ந்திருந்தது அவளுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. கடுஞ் சினங்கொண்டு நேரே சமையலறைக்குச் சென்றாள். ஒரு குடம் நிறைய அழுக்குத் தண்ணீரை நிரப்பிக் கொண்டுவந்து சாக்கிரட்டீசின் தலையில் அபிஷேகம் செய்தாள். அப்போதும் சாக்கிரட்டீஸ் கோபங்கொள்ளவில்லை. பொறுமையாக இருந்து "இடியும் மின்னலும் மழைக்கு அறிகுறி என்று சொல்கிறார்களே அது உண்மைதான் போலிருக்கிறது" எனக் கூறிவிட்டுத் தியானத்தில் ஆழ்ந்தார்.

ஆபிரகாம் லிங்கனின் மனைவியும் இதே போல் பொல்லாத கோபக்காரி. அடிக்கடி லிங்கனிடம் குற்றம் கண்டுபிடிப்பது அவளுக்குப் பொழுதுபோக்கு. 'நீங்கள் அழகாக இல்லை. உங்கள் நடை சரியாக இல்லை. உங்கள் உருவம் சலிப்பைத் தருகிறது. நீங்கள் பட்டினி கிடப்பவர் போல் காணப்படுகிறீர்கள். உங்கள் கைகளும், கால்களும் நீளமாக இருக்கின்றன ஆனால் தலையோ குட்டையாக இருக்கின்றது" இப்படியெல்லாம் அடிக்கடி நச்சரித்துக் கொண்டிருப்பாள். இவர்களது இல்லற வாழ்க்கையில் இவ்வாறு சண்டையும் பூசலும் நிறைந்திருந்தன.

ஆபிரகாம லிங்கனோ மக்கள் நலனில் நாட்டம் கொண்டவராக எப்போதும் மக்கள் மேம்பாடு பற்றியே பேசிக் கொண்டிருந்தார். தன்னிடம் வந்த பொதுமக்களைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருப்பார்.

ஒருநாள் காலை லிங்கன் உணவருந்திக் கொண்டிருந்தார்.

மனைவி அவருக்குக் கூறிய விஷயம் பற்றிய கருத்தில் மாறுபட்டவராகக் காணப்பட்டார். மனைவி சொல்வது சரியென்று அவரால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. மனைவி சொன்னதை ஏற்றுக் கொள்ள அவர் மறுத்து விட்டார்.

ஆபிரகாம் லிங்கன் தான் சொன்ன கருத்தைத் தட்டிக் கழித்ததைக் கண்ட அவர் மனைவிமேல் கோபங் கொண்டு வெகுண்டெழுந்தாள். அருகிலிருந்த சூடான காப்பியை அவருடைய முகத்தில் வீசினாள். பொறுமை மிக்க லிங்கன் பரபரப்படையவில்லை. மனைவியை ஏசவில்லை. மௌனமாக இருந்து கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டார். எழுந்து தன்வேலையைக் கவனிக்கச்சென்று விட்டார்.

இந்த இரு நிகழ்ச்சிகளும் இரு பெரும் மேதைகளின் பொறுமையைக் காட்டி நிற்கின்றன அல்லவா? [இ]

## வவுனியா வர்த்தக ஊழியர் சங்கப் பணிக்குப் பாராட்டு

வவுனியாவில் அப்போது இருந்த அரசாங்க அதிபர் திரு கே. சிவலோகேஸ்வரனின் ஆசியுடனும் உதவியுடனும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட வவுனியா வர்த்தக ஊழியர் சங்கமும் தடுத்து விடப்பட்டோர் புனர்வாழ்வுக் கழகமும் நன்றாக இயங்கி சேவையாற்றி வருவது மகிழ்ச்சி அளிக்கின்றது'

அச்சுறுத்தல்கள் இடையூறுகள், தடைகளுக்கு மத்தியில் வளர்ச்சியடைந்து ஓர் ஆண்டைப் பூர்த்தி செய்து தமக்கென ஓர் அலுவலகத்தைச் திறப்பது பாராட்டுக்குரியது

வவுனியா வர்த்தக ஊழியர் சங்கத்தின் ஒரு வருட நிறைவின் போது அதற்கான காரியாலயத் திறப்பு விழாவில் விசேட விருந்தினராகக் கலந்து கொண்ட டாக்டர் எஸ். வி. பரராஜசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிர்வாகக் குழு உறுப்பினர் திரு. கணேசன் பேசுகையில்;

★ வவுனியா வர்த்தக ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் பெற்றுத்தருவது.

★ வாராந்த ஓய்வான 1½ நாட்களில் தற்போது 1 நாள் ஓய்வே கிடைத்துள்ளது இதனை 1½ நாளாகப் பெற்றுக் கொடுப்பது.

★ ஊழியர்களுக்கு மதியநேர உணவுக்கென குறிக்கப்பட்ட உணவு இடைவேளை நேரம்

★ மற்றும் வர்த்தக நிலையங்களில் தங்கியிருந்து வேலை செய்யும் ஊழியர்களுக்கு இருப்பிட வசதிகள் மருத்துவ வசதிகள் என்பவற்றைப் பெற்றுத் தருவது

இப்படியான நடவடிக்கைகளில் சங்கம் ஈடுபடவுள்ளது என்று தெரிவித்தார்.

செயலாளர் ஜனப்நவாஸ்பீன் பேசுகையில் சங்கம் தொடர்ந்து அங்கத்தினர்களின் ஒத்துழைப்பினாலேயே இயங்கவேண்டியுள்ளது. உறுப்பினர்களின் சேவைகள் பலவற்றையும் பெற்றுக் கொள்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

திருவாளர்கள் எஸ். ராமநாதன் கேசவர் பொருளாளர் ஜனப் சஹிர் ஆகியோரும் இங்கு உரையாற்றினார்கள். (இ 64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல் ஆரோக்கிய தாதிகள் பயிற்சிக்கு 15 பேர் தெரிவு

பண்டத்தரிப்பு ஜன 11

பாடசாலை பற்சிகிச்சை நிலையங்களில் பணிபுரிய பல் ஆரோக்கிய தாதிகள் பயிற்சிக்கு பதினைந்து தமிழ் யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப் பயிற்சி இரண்டு வருட காலம் தமிழ் மொழிமூலம் நடைபெறவுள்ளது.

இவர்களது பயிற்சி முடிந்ததும் பாடசாலை பற்சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளன.

யாழ் மாவட்டத்தில் ஐந்து பாடசாலைகளில் தான் பற்சிகிச்சை நிலையங்கள் இயங்குகின்றன.

[ஓ-120]

## உள்ளூர் இடமாற்றம் பெற்ற ஆசிரியர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன 11

யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் ஜனவரி முதலாம் திகதி முதல் இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்களின் மற்றொரு பட்டியல் யாழ் கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:

செல்வி ஜெ. செல்லத்துரை, மயிலிட்டி ஞானோதயா வி:(3நாள்) சில்லாலை றோ. க. த. க. (2 நாள்) — மயிலிட்டி ஞானோதயா வி (3நாள்) யா/ யூனியன் கல்லூரி (2நாள்). திரு. த. தவராசா. உரும்பராய் சைவத் தமிழ் (3 நாள்) சட்டுவன்புலம் ம. வி. (2 நாள்) - குருமபசிட்டி பொன் பரமானந்தா (3 நாள்) கட்டுவன்புலம் ம. வி. (2 நாள்), திரு. க. ஆனந்தராசா, நடேஸ்வராக் கல்லூரி— உரும்பராய் சைவத் தமிழ் வித்தி, செல்வி தர்மபூபதி அன்னலிங்கம், நாரந்தனை கணேச வித்தி — மானிப்பாய் மெமோறியல் ம. வித்தி. திரு. சி சிவனேயன் கலாநிதி தியாகராசா ம ம. வி. — மானிப்பாய் இந்துக் கல்லூரி, திரு. க. நாகராஜா மானிப்பாய் இந்துக் கல்லூரி — சென் சாள்ஸ் ம வித்தியாலயம், திரு. க. ஜெயபாலரெத்தினம் செனசாள்ஸ் ம: வித்தி- மல்லாகம் ம. வித்தியாலயம், க. வேலாயுத பிள்ளை ஞானச்சாரியார் கல்லூரி (முழுநாள்)— தொண்டமனாறு ம. வித்தியாலயம் (2 நாள் ஞானச்சாரியார் கல்லூரி (3 நாள்), க. தேவராஜா. கோப்பாய் ம. வி. (3 நாள்), தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம. வி.(2 நாள்)- கோப்பாய் ம. வித்தி. (முழுநாள்), திரு கே. மார்க்கண்டு, சிங்கள ம வித்தி (முழுநாள்)- கட்டுவன்புலம் ம. வி. )2 நாள்) சிங்கள ம. வித்தி (3 நாள்).

திருமதி ஸ்ரீ. இரட்ணம், அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி - ஆவரங்கால் மகாஜனா வித்தி. செல்வி யோ. காசிப்பிள்ளை, ஆவரங்கால் மகாஜனா வித்தி (3 நாள்) நாவலர் வித்தி கோப்பாய் (2 நாள்)- புனித திரேசா மகளிர் அச்சுவேலி, திருமதி பி. இராசையா, மகாவித்தி கோப்பாய் - மகா வித்தி கோப்பாய் (3 நாள்) நாவலர் வித்தி (2நாள்), செல்வி பி. கனகரத்தினம், றோ/ க. த: மயிலிட்டி — றோ. க. த. மயிலிட்டி (3 நாள்) மகாஜனா கல்லூரி தெல்லிப்பழை (2நாள்), திருமதி. மோ ஜெசிந்தா ஜோஜ், வீமன்காமம் ம. வி. தெல்லிப்பழை- வீமன்காமம் ம. வி. (3 நாள்) குளமங்கால் வித்தி மல்லாகம் (2 நாள்). திருமதி எஸ். சத்தியமூர்த்தி, மகா வித்தி மல்லாகம் (3 நாள்) குளமங்கால் மல்லாகம் (2 நாள்) — மகாவித்தியாலயம் மல்லாகம் (5 நாள்), திருமதி எம். ரஞ்சன், ஞான பண்டிதர் வித்தி (2 நாள்) மூத்துத்தம்பி வித்தி திருநெல்வேலி (3 நாள்)— கொக்குவில் ஞான பண்டிதர் வித்தி (முழுநேரம்); திருமதி. பு. வேதநாதன், புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தி — முத்துத்தம்பி ம. வித்தி. செல்வி எம். என் மரியதாசன், புங்குடுதீவு கணேச வித்தி — கொட்டடி நமசிவாய வித்தியாலயம், திருமதி எஸ். வசந்தகுமார் புங்குடுதீவு ம. வித்தி — புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தி (2 நாள்) புங்குடுதீவு ம. வித்தி (3 நாள்). (இ-10)

## பாடசாலைகளில் மரம் நடுக அதிபர்களுக்குப் பணிப்பு

மானிப்பாய், ஜன. 11

ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதி தேசிய மரம் நடும் நாளாகவும் அதனை அடுத்து வரும் வாரம் மரம் நடும் வாரமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அந்த நாளுக்ோ - வாரத்துக்கோ மட்டும் செயற்படுத்தாது வருடம் முழுவதும் தொடர்ச்சியாக செயற்படுத்த அதிபர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

யாழ்ப்பாணப் பாடசாலை அதிபர்களை யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர். திரு வெற்றிவேலு சபாநாயகம் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

இத்திட்டத்தை விரைவாகவும், தொடர்ச்சியாகவும் செயற்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு பாடசாலையிலும் உள்ள தோட்ட வேலையுடன் இணைத்துச் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை பாடசாலை அதிபரும் தோட்ட வேலைக்கு பொறுப்பான ஆசிரியரும் செயற்படுத்துவார்கள் எனக் கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

(ச 90)

### நெடுந்தீவு பிரதேச சபை
# பொது அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டமைச் சட்டத்தின் 147, 148, 149, 150, 152 (1) பிரிவுகளின் பிரகாரம் நெடுந்தீவு பிரதேசசபையின் 1988 - 12 - 01 திகதிய1ஆம் இலக்கத் தீர்மானத்தின் பிரகாரமும் 1989 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் கீழே குறிப்பிட்ட அட்டவணைகளில் தரப்பட்டுள்ள வியாபாரங்களிலிருந்து உரிமைச் சட்டணங்கள் அல்லது வரியும் வாகனங்கள் விலங்குகள் மீதான வரியும் நெடுந்தீவு பிரதேச சபையினால் விதிக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

1989 ஆம் ஆண்டு உரிமைக் கட்டணங்களும் வரிகளும் 1989 ஆம் ஆண்டு தைமாதம் 1 ஆம் திகதி தொடக்கம் மூன்று மாதங்களுக்குள் பிரதேச சபைக் காரியாலயத்தில் செலுத்துவதுடன் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் 31 ஆம் திகதிக்கு முன் செலுத்தப்படவேண்டும்.

நா. சந்திரசேகரம்,
விசேட ஆணையாளர்,
நெடுந்தீவு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நெடுந்தீவு
1 - 1 - 1989.

#### விசேட ஏற்றுமதி வரிக் கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒவ்வொரு மாடும் எமது கிராமத்தை விட்டு ஏற்றப்படும்போது — | ரூபா | 7. 00 |
| 2. | ஒவ்வொரு ஆடும் எமது கிராமத்தை விட்டு ஏற்றப்படும்போது — | ரூபா | 5. 00 |
| 3. | ஒவ்வொரு கருவாட்டு பொதிக்கும் (50 கிலோ) — | ரூபா | 10. 00 |
| 4. | ஒவ்வொரு 50 மட்டை கிடுகு பொதிக்கு — | ரூபா | 00 50 |
| 5. | ஒவ்வொன்றும் 50 பனை மட்டை பொதிக்கு — | ரூபா | 00. 25 |

#### உரிமைக் கட்டணங்கள்

1ஆம் அட்டவணை — வருடாந்த மதிப்பீடு

| | | ரூபா 500 வரை | 500 தொடக்கம் 1000 வரை | ரூபா 1000க்கு மேல் |
|---|---|---|---|---|
| 1. | தேனீர்க்கடை வைத்திருத்தல் | 75. 00 | 100 00 | 150. 00 |
| 2. | சாப்பாட்டுக்கடை வைத்திருத்தல் | 75. 00 | 100. 00 | 150 00 |
| 3. | தேனீரும் சாப்பாட்டுக் கடையும் வைத்திருத்தல் | 75. 00 | 150. 00 | 200. 00 |
| 4. | பேக்கரி வைத்திருத்தல் | 100. 00 | 150, 00 | 200. 00 |
| 5. | முடி வெட்டும் இடத்தை வைத்திருத்தல் | 75. 00 | 150 00 | 200. 00 |
| 6. | சலவைக்கடை வைத்தல் | 75. 00 | 150. 00 | 200. 00 |
| 7. | மாட்டிறைச்சிக்கடை வைத்தல் | 150. 00 | 250. 00 | 300 00 |
| 8. | ஆட்டிறைச்சிக் கடை வைத்தல் | 150. 00 | 250, 00 | 300 00 |
| 9. | மீன் விற்கும் கடை வைத்தல் | 100. 00 | 150 00 | 200. 00 |
| 10. | "மினி சினிமா" காட்டும் இடத்தை நடாத்தல | 200 00 | 250. 00 | 500. 00 |

#### வரிக் கட்டணம்

2ஆம் அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கட்டிடப் பொருள் விற்பனை செய்தல் | 100. 00 | 150. 00 | 200. 00 |
| 2. | இரும்புப் பொருள் விற்பனை செய்தல் | 100 00 | 150 00 | 200. 00 |
| 3. | சிமெந்து வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் 25 பொதிக்கு மேல் | 75. 00 | 100. 00 | 150, 00 |
| 4. | தச்சுத் தொழிற்சாலை வைத்தல் | 75. 00 | 100. 00 | 150. 00 |
| 5. | இரும்புப்பட்டறை வைத்தல் | 50. 00 | 75. 00 | 100 00 |
| 6 | ஆபரணங்கள் தயாரித்தல் பழுது பார்த்தல் விற்பனை செய்தல் | 50. 00 | 100, 00 | 150. 00 |
| 7. | பலசரக்குக் கடை வைத்தல் | 50. 00 | 100 00 | 150 00 |
| 8. | சைக்கிள் திருத்துமிடம் வைத்தல் | 50. 00 | 75. 00 | 100. 00 |
| 9. | சுண்ணாம்பு அல்லது சுண்ணாம்புக் கற்களை வைத்தல் | 50. 00 | 100. 00 | 150. 00 |
| 10. | செக்கு அல்லது கை இயந்திர மூலம் எண்ணெய் வடித்தல் | 50 00 | 75. 00 | 100. 00 |
| 11. | மீன் இறைச்சி காய வைக்கும் இடத்தை வைத்தல் அல்லது விற்பனை செய்தல் | 50. 00 | 75. 00 | 100. 00 |
| 12. | பெற்றோல் டீசல் விற்பனை நிலையம் | 250. 00 | 350 00 | 500. 00 |

#### வாகனங்கள் விலங்குகள் மீதான வரி

| | | |
|---|---|---|
| 1. | ஒவ்வொரு துவிச்சக்கர வண்டிக்கும் — | 5. 00 |
| 2. | ஒவ்வொரு மாட்டு வண்டிக்கும் — | 14. 00 |
| 3. | ஒவ்வொரு மாடும் (ஏற்றுமதியின் போது) — | 7. 00 |
| 4. | ஒவ்வொரு ஆடும் (ஏற்றுமதியின் போது) — | 5. 00 |

(C-1268)

மக்கள் முகம்

### பதவி உயர்வு

கரவெட்டி. ஜன 11

பருத்தித்துறை நகர சபைச் செயலாளர் திரு. கனகசபை சண்முகநாதன் உள்ளூராட்சி நிர்வாக சேவைத்தரத்திற்குப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட தமிழரில் இவர் மட்டுமே தெரிவாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பல பாகங்களிலும் உள்ளூ [illegible] இவர் கடமையாற்றியுள்ளார். [illegible]

### முதலாவது ஆண்டு நினைவு



**மயில்வாகனம் சந்திரவதி**
(லீலாவதி)

தோற்றம்:- 10 8- 1948 — மறைவு:- 24- 12- 1987

திதி சதுர்த்தி: 11. 1. 1989

இல்லற விளக்கே! நீ எம்மை விட்டுப் பிரிந்து ஓர் ஆண்டு மறைந்து விட்டது எம் மூவா வாழ்வுக்காக அயராது உழைத்தீர். உமது அன்பு பாலகன் அப்பா! அம்மா வரமாட்டாளா என்று கேட்கும் வயதில் துன்பமுடன் வாழுகிறான்; நான் என்ன செய்வேன்? படைத்தவனே பாசக்கயிறு அனுப்பிவிட்டான்? உமது கடைசி வார்த்தைகளை நான் கேட்கவுமில்லை. நடுஇரவில் எம்மை எண்ணிப் புலம்பிக் கொண்டு பிரிந்தாயே.

உமது ஆத்மா சாந்தியடைய உமது அன்புத் தெய்வங்களை வேண்டி நிற்கின்றோம்.

கணவன், மகன், உற்றார், உறவினர்.

4 ஆம் குறுக்குத் தெரு,
மணியந்தோட்டம்,
கொழும்புத்துறை.

கன்னைம் கிழக்கு,
சுன்னாகம்.

(8630)

### ஓராண்டு நினைவு மலர்



அமரர்
**திரு. சின்னப்பொடி ஜெகநாதன்**

(கட்டட உரிமையாளர் இல. 162)
கஸ்தூரியார் வீதி.


மலர்வு:- 4 -09- 1937 — உதிர்வு:- 24- 12- 1987

அறிதென ஒளவை உரைத்த
மானிடனாய்ப் பிறந்து
நன்மக்கள் நால்வரை ஈன்றெடுத்து
நற்குடியெனத் திகழ்ந்து
மனிதனாய்ப் பிறந்ததன் பயன்
பொதுத் தொண்டென உணர்ந்து
சமூக சேவையே உயிர் மூச்சென வாழ்ந்து
அத் தொண்டாற் பல்லாயிரம்
உள்ளங்களில் நிறைந்து
அத் தொண்டின் போதே உயிர் நீத்த
எமதருமைத் தெய்வமே
மறைந்தது உமது உடலேயன்றி!
உணர்வுமல்ல! உயிருமல்ல!
அவை பசுமையென இன்றுமுண்டு
என்றுமுண்டு எம்மிடம்.
அனுதினமும் இறைவனை இறைஞ்சுகிறோம்
உமது ஆத்மா சாந்திக்காய்.

அன்பு மனைவி, பிள்ளைகள்.

(8638)

### ஓராண்டு நினைவஞ்சலி



செல்வன்
**செல்லத்துரை - ஸ்ரீகரன் (குட்டி)**

உதிப்பு: 29-03 1960 — அழிப்பு: 09-01-1988

உமது எண்ணங்கள் உம் வாழ்நாளில் நிறைவேறாவிட்டாலும் என்றோ ஒருநாள் - நிறைவேறும் என்ற நம்பிக்கையில் உம் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உறவினர்கள்,
நண்பர்கள்:

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**செல்லத்துரை சொர்ணம்மா**

வையத்தில்: 09 - 01 - 1922 — வானுலகில்: 12-12-1988

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காயிருந்து எம்மை அன்புடன் ஆதரித்து உலகினிலே ஒளி பெறச் செய்து எம்மையெல்லாம் நீங்காத் துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றீர்களே! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்!

பிரப்படி, கொக்குவில்.

(8820)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொய்யாமொழி**

**குறள்:**

வெண்மை எனப்படுவது
யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு.

**பொருள்:**

புல்லறிவு என்று சொல்லப்படுவது யாது என்றால், 'யாம் அறிவுடையேம்' என்று ஒருவன் தன்னைத்தானே மதித்துக்கொள்ளும் செருக்காகும்

உதயன்
உண்மை - விரைவு - ...
இல. 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
11. 1. 1989 த. பெ. இல 23

# நவீன தொழில் நுட்பம் நாடி...

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில், தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா தரத்தில், பொறியியல் பயிற்சி நெறிகளை ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

உயர்கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட உள்ள இந்தத் திட்டத்திற்கு, ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி வழங்க விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டிய இந்தத் திட்டத்தை, நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமை காரணமாக தொடங்க முடியாமற் போயிற்று என்றும் தெரிய வந்துள்ளது இது கவலைக்குரிய விடயமாகும்.

தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா தரத்திலான பொறியியல் பயிற்சிகளைப் பெறுவதானால், வடபகுதி மாணவர்கள் இப்போது கட்டுபெத்தை பல்கலைக்கழகத்துக்கு அல்லது இந்திய பொறியியல் கல்லூரிகளுக்குச் செல வேண்டி உள்ளது.

சிவில், இயந்திரவியல், மின்னியல் துறைகளில் டிப்ளோமா பயிற்சி இங்கு ஆரம்பிக்கப்பட்டால், இப்பகுதி மாணவர்களின் பொறியியல் சார்ந்த தொழில்நுட்பக் கல்வித் தேவையை ஓரளவாவது பூர்த்தி செய்ய முடியும்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் (வளாகமாக) ஆரம்பிக்கப்பட்டு சுமார் பதினைந்து வருடங்கள் கழிந்து விட்ட போதிலும், பொறியியல் பீடம் இன்னும் அங்கு ஸ்தாபிக்கப்படவில்லை.

ஏனைய நாடுகளில், பிரதேசங்களில், எலக்ரோனிக் கம்பியூட்டர் றோபோ யுகங்கள் மலர்ந்து, வளர்ந்து கொண்டிருக்கும்போது, சாதாரண பொறியியல் முழுநேரப் பயிற்சி நெறிகள் தமிழ்ப் பகுதிகளில் இன்னும் ஆரம்பிக்கப்படாமல் இருப்பது வேதனைக்கு உரியதாகும். தமிழர்கள் எந்தளவுக்குப் புறக்கணிக்கப்பட்டார்கள், புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதை அது பிரதிபலிக்கவும் செய்கிறது.

எனவே காலத்தின் தேவை அறிந்து, பொறியியல் டிப்ளோமா பயிற்சிகள் பல வருடங்களுக்கு முன்னரே இங்கு ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். இப்போதாவது அவற்றைத் தொடங்க முயற்சி எடுப்பது வரவேற்கத் தக்கது.

வேண்டிய நிதி உதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்க விருப்பம் தெரிவித்திருப்பதால் சந்தர்ப்பத்தை இனியும் நழுவவிடாது புதிய பயிற்சி நெறிகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

காலம் தாழ்த்தி ஆரம்பமாக இருக்கும் இத்திட்டம் செயற்படுவதற்குத் தடங்கல் எதுவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது தமிழ் மாணவர் நலனில் அக்கறை உள்ள சகலரதும் கடமையாகும்.

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் புதிய தொழில் நுட்பப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படுவது போல, யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திலும் பொறியியல் பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டும்.

தமிழ் மாணவர்கள் சாதாரண பொறியியல் பயிற்சிகளை மட்டுமல்லாது எலக்ரோனிக், கம்பியூட்டர் போன்ற நவீன தொழில் நுட்பத் துறைகளிலும் பயிற்சி பெற வசதி செய்யப்பட வேண்டும்.

அவ்வாறான பயிற்சிகள் மூலம் விவசாயம், கைத்தொழில், தொலைத்தொடர்பு, இயற்கை வளம், பாதுகாப்பு போக்குவரத்து ஆகிய துறைகளில் நவீன உத்திகளைக் கையாளக் கூடிய சகாப்தத்தில் நாம் அடியெடுத்து வைக்கலாம்.

எமது இளைஞர் யுவதிகளுக்கு நவீன துறைகளில் அறிவும் பயிற்சியும் இல்லாமல், அந்தத் துறைகளில் நாம் காலெடுத்து வைக்க முடியாது. அவ்வாறாயின் நாம் பல வகைகளாலும் பின் தள்ளப்பட்டு விடுவோம் என்பதையும் மறந்து விடலாகாது.

நவீன துறைகளில் ஆற்றலும் பயிற்சியும் இருந்தால் தான் எமது மூலவளங்களைத் தக்கபடி பயன்படுத்தி, தொழில் வளத்தைப் பெருக்கி, மக்கள் வாழ்வில் முன்னேற்றத்தைக் காணவும் முடியும்.

## தரம் உயர்வு

ஜெருசலம், ஜன 10

இஸ்ரேலுடனான ராஜதந்திரத் தொடர்பை தரம் உயர்த்த சோவியத் யூனியன் தீர்மானித்துள்ளது.

இஸ்ரேல்வெளியுறவு அமைச்சர் மோசேஷ ஆரன்ஸ் வானொலி உரையில் இதனைத் தெரிவித்தார். (எ)

நஜிப் அரசு கவிழும் வரை:

# மாஸ்கோ அரசுடன் பேச்சு இல்லை; ஆப்கன் கெரில்லாக்கள் அறிவிப்பு!

காபூல், ஜன. 10

டாக்டர் நஜிபுல்லா தலைமையிலான அரசு கவிழ்க்கப்படும் வரை சோவியத் யூனியன் அரசுடன் பேச்சுகளை நடத்தப் போவதில்லை என்று ஆப்கன் முஜஹாதீன் கெரில்லாக்கள் அறிவித்து விட்டனர்.

அண்மையில் இஸ்லாமபாத்தில் சோவியத் அரசு அமைச்சர் யூலிவொரன்ஷோவ் ஆப்கன் கெரில்லாக்களுடன் நடத்திய பேச்சுக்கள் முட்டுக்கட்டையில் முடிந்தது தெரிந்ததே.

ஆனால் அப்பேச்சுக்கள் முடிவில் ஒரு விஷயத்தில் இருதரப்பினரும் உடன்பாடு கண்டிருந்தனர். அது, மீண்டும் சோவியத்தில் சந்தித்துப் பேசுவது என்பது.

இப்போது கெரில்லாக்கள் சோவியத் அரசுடன் எங்குமே சந்தித்துப் பேசுவது இல்லை என்று அறிவித்திருக்கின்றனர்.

டாக்டர் நஜிபுல்லா அரசு தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதில் சோவியத் அரசு அக்கறை காட்டும் வரை பேச்சுக்கள் நடத்துவதில் பிரயோசனம் ஏற்படாது என்பதே கெரில்லாக்களின் நிலைப்பாடு.

இதேவேளை— ஆப்கன் அதிபர் டாக்டர் நஜிபுல்லா நேற்று நிகழ்த்திய டெலிவிஷன் உரையில்; பிரச்சினைக்குத் தீர்வு காண சோவியத் அரசு சமர்ப்பித்து வரும் ஒவ்வொரு யோசனையையும் கெரில்லாக்கள் நிராகரித்து வருவதைக் கண்டித்தார் [எ]

# கடாபியின் அழைப்பை அமெரிக்கா நிராகரிப்பு

வாஷிங்டன், ஜன. 10

நேரடிப் பேச்சு நடத்த வரும் படி அமெரிக்காவின் புதிய அதிபர் புஷ்ஷுக்கு லிபியா அதிபர் கடாபி விடுத்த அழைப்பை வெள்ளை மாளிகை நிராகரித்து விட்டது.

"பேச்சு எமக்கு முக்கியம் அல்ல; ரசாயனத் தொழிற்சாலையை அழிப்பது தான் இப்போது கடாபி செய்யவேண்டியது"—இப்படி வெள்ளை மாளிகை அறிவித்தது.

திரிப்பொலிக்கு அருகில் நிறுவப்பட்டுள்ள ஆலை ரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை என்று லிபியா வலியுறுத்தி வருகிறது.

இத்தொழிற்சாலையை அமெரிக்கா அழித்தால் அதற்கு லிபியா தகுந்த பதிலடிகொடுக்கும்என்று ஜனாதிபதி மும்மார் கடாபி எச்சரித்திருக்கிறார். (எ)

# ஆயுதப் போராட்டம் தொடரும்

## ஆபிரிக்க தேசியகாங்கிரஸ் அறிவிப்பு

சேப்டவுன், ஜன 10

கறுப்பின மக்களின் விடுதலைக்காகப் போராடும் தேசிய ஆபிரிக்கக் காங்கிரஸ் தனது பயிற்சி முகாம்களை அங்கோலாவில் இருந்து அகற்றிவிடப்போவதாக அறிவித்திருக்கிறது

தேசிய ஆபிரிக்கக் காங்கிரஸின் தலைவர் ஒலிவர் தம்போ இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

அங்கோலாவில் இருந்து கியூபன் விலகுவது நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்குவது ஆகியன சம்பந்தமாக அண்மையில் தென்ஆபிரிக்கா, அங்கோலா, கியூபா நாடுகளும் உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டமை தெரிந்ததே.

அதைத் தொடர்ந்தே திரு. தம்போ இந்த அறிவித்தலை விடுத்தார்.

அங்கோலாவில் ஆயுதப் பயிற்சி முகாம்களை வைத்திருப்பது நீடிப்பின், அதைச் சாட்டாக வைத்து நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்குவது இழுத்தடிக்கப்படலாம் என்றும் திரு தம்போ தெரிவித்தார்.

தேசிய ஆபிரிக்கக் காங்கிரஸ் தன்சானியாவில் இருந்து இயங்கும் என்றும் தென் ஆபிரிக்காவின் நிறவெறி ஆட்சிக்கு எதிரான ஆயுதப் போராட்டம் தொடரும் என்றும் திரு தம்போ அறிவித்தார். (எ)

### சுட்டுக் கொலை

ஹொண்டுரஸ் ஜன 8

கொன்ரகா கிளர்ச்சி அமைப்பின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவர் ஹொண்டுரஸில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நிக்கரகுவா அரசே இதற்குக் காரணம் என்று கொன்ரா அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது. (எ)

# லெபனானில் போட்டிக் குழுக்கள் மோதல்: 80 பேர் பலி!

பேரூட், ஜன. 10

லெபனானில் போட்டி பலஸ்தீனக் குழுக்களிடையே ஏற்பட்டுள்ள மோதலில் கடந்த ஞாயிற்றுக்கிழமையில் இருந்து இதுவரை 80 க்கு அதிகமானோர் உயிரிழந்தனர்.

அமல் குழு சிரியாவின் ஆதரவுடனும் ஷிஐற் குழு ஈரானின் ஆதரவுடனும் இயங்குகின்றன

இரண்டு நாடுகளும் தீவிர முயற்சி எடுத்தும் போட்டி மோதலை அடக்க முடியவில்லை.

இரண்டு குழுக்களும் ரொக்கட்டுக்கள் கனரக ஆயுதங்கள் மற்றும் பீரங்கிகள் கொண்டு மோதுகின்றன என்றும் அறிவிக்கப்படுகிறது.

44பேரைப் பலி கொண்ட

# பிரிட்டிஷ் போயிங் விமான விபத்து காரணம் அறிய விசாரணை!

லண்டன், ஜன. 10

இரண்டு என்ஜின்கள் பொருத்தப்பட்ட போயிங் விமானம் கடந்த ஞாயிறு லண்டனில் விபத்துக்குள்ளானது விமானப் போக்குவரத்து அதிகாரிகள் மத்தியில் பலத்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது

விமானத்தின் இரண்டு என்ஜின்களும் ஒரே சமயத்தில் பழுதாவது 10லட்சத்தில் ஒன்று தான் இடம்பெறும் என்று விமான நிபுணர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

அப்படியானால் கடந்த ஞாயிறு லண்டனில் விபத்துக்குள்ளான விமானத்தின் இரண்டு என்ஜின்களிலும் ஏற்பட்ட கோளாறுக்குக் காரணம் என்ன?

திட்டமிட்ட ரீதியில் கோளாறு ஏற்படுத்தப்பட்டதா?

இதுபற்றி அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் விமான நிபுணர்களும் புலனாய்வு அதிகாரிகளும் கூட்டாக ஆராய்ந்து வருகின்றனர்.

# எல்சல்வடோரில் சிவில் நிர்வாகம் ஸ்தம்பிதம்

சான்சல்வடோர் ஜன.10

எல்சல்வடோரில் இடது சாரிக் கெரில்லாக்களின் தீவிரவாதச் செயல்களினால் நாட்டின் மூன்றில் ஒரு பகுதியில் சிவில் நிர்வாகம் ஸ்தம்பித்து விட்டதாக அறிவிக்கப்பட்டது

அமெரிக்க அரசு ஆதரவிலான வலது சாரி அரசாங்கத்தை எதிர்த்து இடது சாரி கெரில்லாக்கள் போராடி வருகின்றனர்.

கடந்த சில தினங்களில் 8 அரசு அதிகாரிகளை இடது சாரிக் கெரில்லாக்கள் கொலை செய்தனர்.

மற்றும் பல அரசு அதிகாரிகளுக்கும் கெரில்லாக்கள் கொலைப் பயமுறுத்தல் விடுத்திருக்கின்றனர். (எ)

### ருமேனியா வீராங்கனை

ருமேனியாவின் ஜனாதிபதி நிக்கொலஸ் கியுசெஸுவின் மனைவி எலனா கியுசெசு தேசிய வீராங்கனையாக பிரகடனப்படுத்தப்பட்டார்

அங்கோலாவில் இருந்து

# கியூபா துருப்புக்கள் வாபஸ் நேற்று முதல் ஆரம்பம்

லுவாண்டா, ஜன 10

அங்கோலாவில் இருந்து கியூபன் துருப்புக்கள் வெளியேறுவது நேற்று ஆரம்பித்தது.

இதுசம்பந்தமாக உத்தியோக ரீதியிலான நிகழ்ச்சி ஒன்று தலை நகரான லுவாண்டாவில் இடம் பெற்றது.

கியூபன் துருப்புக்கள் விலக்கப்படுவதற்குப் பதிலாக நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்க தென் ஆபிரிக்க அரசு ஒப்புக்கொண்டு, அங்கோலா, கியூபா ஆகிய நாடுகளுடன் உடன்பாடு செய்து கொண்டது.

அதற்கிணங்க வருகிற ஏப்பிரலுக்கு முன்னர் 3 ஆயிரம் கியூபன் துருப்புக்கள் தாய் நாடு திரும்பி விடும். எஞ்சிய துருப்புக்கள் 991க்கு முன்னர் கியூபா திரும்ப வேண்டும். (எ)

# ஜெயலலிதா-நிர்மலா மோதும்

## தொகுதியின் நிலைவரம் இதோ!

**சென்னையில் இருந்து எஸ் ராஜ்குமார்**

போடி, ஜன. 10

ஜெயலலிதா வெண்ணிற ஆடை நிர்மலா மோதும் போடி தொகுதியில் கடுமையான போட்டி நிலவுகிறது.

தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகளில் இன்று எல்லோரது கவனத்தையும் ஈர்த்திருப்பது மதுரை மாவட்ட போடி நாயக்கனூர் தொகுதிதான்

இந்த தொகுதியில் அ.தி.மு.க. ஒரு பிரிவு பொதுச்செயலாளரான ஜெயலலிதா எம்.பி.யும் ஜானகி அம்மாள் அணி சார்பில் நடிகை வெண்ணிற ஆடை நிர்மலாவும் மோதுகின்றார்கள்.

இவர்களுடன் தி.மு.க. வின் சார்பில் போடி நாயக்கனூர் நகரசபை தலைவர் முத்து மனோகரனும் காங்கிரஸ் கட்சியில் மதுரை மாவட்ட செயலாளரும் முன்னாள் எம். எல். ஏ. யுமான கே. எஸ். எம். ராமச்சந்திரனும் களத்தில் இருக்கிறார்கள்.

ஜெயலலிதாவைப் பொறுத்தவரை போடி தொகுதி பின் தங்கிய தொகுதியாக இருக்கிறது, அதை முன்னேற்றவே அங்குபோட்டியிடுவதாக அவர் கூறியுள்ளார்.

ஜெயலலிதா ஆதரவாளரான முன்னாள் எம். எல். ஏ. சுப்பிரமணியம் கூறியதாவது:-

1952 தேர்தல் முதல் 1984ஆம் ஆண்டு தேர்தல்வரை இந்த தொகுதியில் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவர்களே வெற்றி பெற்றிருக்கிறார்கள், ஜெயலலிதா அரசியல்வாதி. ஆனால் நிர்மலா அப்படி அல்ல அவர் ஒரு நடிகை. படித்தவர்கள் ஜெயலலிதாவுக்குத் தான் ஓட்டுபோடுவார்கள். மேலும் ஜெயலலிதாமீது மாணவர்களுக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது.

தான் ஆட்சியைக் கைப்பற்றினால் வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பேன் என்று ஜெயலலிதா கூறியிருக்கிறார். இதனால் அவர்கள் ஜெயலலிதாவுக்குத்தான் வாக்குப் போடுவார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்

**காங்கிரஸ் நம்பிக்கை**

ஆனால் காங்கிரஸ் கட்சியின் எண்ணம் வேறு மாதிரியாக இருக்கிறது. காங்கிரஸ் வேட்பாளர் கே. எஸ். எம். ராமச்சந்திரன் தொகுதிக்கு நன்கு அறிமுகமானவர். எளிமையானவர் எல்லோருடனும் நன்கு பழகுபவர். இதனால் தங்களுக்கு [illegible] கிடைக்குமென்று நம்புகி[illegible] வாக்காளர்கள் வெளியிலிருந்து நிற்கும் வேட்பாளர்களுக்கு வாக்குப் போடமாட்டார்கள் என்று காங்கிரஸார் கூறுகிறார்கள்.

**தி. மு. க.**

போடி நகரசபையின் தலைவராக தி.மு.க வேட்பாளர் முத்து மனோகரன் இருப்பதால் வெற்றி வாய்ப்பு தங்களுக்கே அதிகமிருப்பதாக தி.மு.க தொண்டர்கள் கருதுகிறார்கள். மேலும் நகரசபைத் தலைவர் என்ற முறையில் அவர் தொகுதிக்கு நன்கு அறிமுகமாகி இருப்பதாலும் நகரசபைத் தலைவர் பதவியில் அவர் நல்லபெயர் எடுத்திருப்பதாலும் வெற்றிபெற முடியும் என்று தி.மு.க நம்புகிறது

**ஜானகி அணி**

ஜானகி அணியில் முன்பு நிறுத்தப்பட்ட கூடலூர் ராமசாமி நின்றிருந்தால் அவர் ஜெயலலிதாவுக்கு ஒப்பிடும் போது பலமில்லாத வேட்பாளர்தான்.

ஆனால் நடிகை வெண்ணிற ஆடை நிர்மலா கடைசி நிமிடத்தில் போட்டியிட மனு தாக்கல்செய்ததால் போட்டி கடுமையாக இருக்கும் என்று ஜானகி அம்மாள் அணியினர் நினைக்கிறார்கள்.

இந்தத் தொகுதியில் 1 லட்சத்து 52 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். இதில் போடியிலிருந்து 60 ஆயிரம் வாக்காளர்களும் தேவாரம் நகரில் 30 ஆயிரம் வாக்காளர்களும் உள்ளனர். மீதியுள்ளவர்கள் கிராமப்புறங்களில் வசிக்கிறார்கள்,

இந்தத் தொகுதியில் விவசாயம் செய்பவர்கள் அதிகம் ஏலக்காய், காப்பி, வாழை ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் பயிர் செய்யப்படுகிறது

**கடந்த தேர்தல்**

1984ஆம்ஆண்டுத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் கே. எஸ் எம். ராமச்சந்திரன் சுமார் 18 ஆயிரம் வாக்குகள்வித்தியாசத்தில் இப்போது தி மு கவின் சார்பில் களத்திலிருக்கும் முத்து மனோகரனைத் தோற்கடித்தார்.

1980இல் அ தி மு க இத்தொகுதியை 16வாக்குகள் வித்தியாசத்தில் வென்றது 1977இல் எல்லாக் கட்சிகளும் தனித்துப்போட்டியிட்ட போது அ தி மு க வேட்பாளரிடம் காங்கிரஸ் 6 ஆயிரம் வாக்குகள்வித்தியாசத்தில் தோற்றது. இதனால் இந்தமுறை காங்கிரஸ் போடி தொகுதியைத் தக்கவைத்துக் கொள்ளும் என்று காங்கிரஸார் கருதுகிறார்கள்.

**பரபரப்பு**

'போடி' தொகுதியில் முக்கியமானவர்கள் போட்டியிடுவதால் மற்றத் தொகுதிகளில் இல்லாத விறுவிறுப்பும் பரபரப்பும் இங்கு நிறையவே காணப்படுகிறது. (எ-9)

# படங்களைத் திரையிட 'போடி'யில் போட்டாபோட்டி

சென்னை, ஜன. 10

போடி தொகுதியில் ஜெயலலிதாவும் நிர்மலாவும் போட்டியிடுகிறார்கள் அல்லவா? இதைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் சேர்ந்துநடித்த சினிமா படங்களுக்குக் கடும்கிராக்கி ஏற்பட்டுள்ளது.

ஜெயலலிதாவுக்கும் நிர்மலாவுக்கும் முதல் படம் 'வெண்ணிற ஆடை' இந்தப் படத்தின்மூலம்தான் இருவரும் திரைஉலகுக்கு அறிமுகமானவர்கள்.

அதன்பிறகு "யாருக்கும் வெட்கமில்லை", 'ரகசியப் பொலீஸ் 115' ஆகிய படங்களிலும் இணைந்து நடித்தார்கள்.

இந்த மூன்று படங்களையும்திரையிடத்தியேட்டர் அதிபர்கள் மத்தியில் போட்டாபோட்டி ஏற்பட்டுள்ளது. பழைய கொப்பியாக இருந்தாலும் பரவாயில்லை என்று தேடிப்பிடித்துத் திரையிடுகின்றார்கள். (எ-9)

# தமிழ் நாடு தேர்தல் பணியில் 5 லட்சம் அரசு ஊழியர்கள்

சென்னை ஜன 10

தமிழ்நாடு சட்டசபை தேர்தலின் போது 5லட்சம் 25 ஆயிரம் அரசு ஊழியர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படுவர்

78 சிரேஷ்ட அதிகாரிகள் அவதானிகளாக பணியாற்றுவர்.

ஒவ்வொரு அவதானியும் 3 சட்டசபைத் தொகுதிகளை மேற்பார்வையிடுவர்

மொத்தம் தமிழ்நாடு சட்டசபையில 234 தொகுதிகள் உள்ளன.

வழமையான பொலீஸ் மற்றும் மத்திய ரிசர்வ் பொலீஸ் ஆகியவற்றுடன் சேர்ந்து பணியாற்ற ஓய்வு பெற்ற 32 ஆயிரம் பாதுகாப்புப் படையினர் பணியாற்றுவார். (எ)

### நீதிமன்றத்தில் வழக்கு

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலை ஒத்திவைக்க [illegible] மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாக்கெடுப்புத் தினம் தைப்பூசத் [illegible] வருகிறது. [illegible] தேர்தலை நடத்த வேண்டும் — இப்படி மனுவில் கோரப்பட்டுள்ளது.

பாரதிய ஜனதா கட்சியின் மாநில துணைத் தலைவர் திரு [illegible] பண்டியன் இந்த மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார். [எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

11 • 01 • 1989 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று/-
• நெகடிவ் (PROCESSING) செய்தல் இலவசம்
• சிறந்த வர்ண நிழற்படச் சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தம்பிமுத்து பூமணி**

மண்ணுலகம்:- 27-5-1930 | விண்ணுலகம்:- 23-12-1987

திதி: 11-1-1989

ஆண்டொன்று சென்றாலும் அணையா விளக்காய் எமதுள்ளத்தில் ஒளிவீசும் எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நாவலடி லேன்,
வண்ணார்பண்ணை. (C/1126)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை செல்லையா, J.P.

[மலாயன் பென்சனியர்]

வேலுப்பிள்ளை செல்லையா J.P. U.K-யில் காலமானார்.

இவர் சுவினையைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவன் வடக்கை வசிப்பிடமாகக்கொண்டவரும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், குணசீலன் (எலக்ரோனிக் எஞ்சினியர் U.K), கணேசலிங்கம் (பொறியியல் மாணவன் U.K) ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற இராசையா, முத்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றேன்,

தகவல்:
சி. தங்கலிங்கம்
மைத்துனர்

புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
புன்னாலைக்கட்டுவன். (8667)

### திருமதி மயில்வாகனம் சிவக்கொழுந்து

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மயில்வாகனம் சிவக்கொழுந்து காலமானார். இவர் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு, திருமதி சின்னக்குட்டியின் அன்பு மகளும், தவமணிதேவி, உருத்திராதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆறுமுகம், செல்லையா அவர்களின் மாமியாரும், திருமதி கார்த்திகேசு ஆச்சிமுத்து, திருமதி தியாகராசா அன்னம்மா, காலஞ்சென்ற ஏகாம்பரம், நாகராசா திருமேனிப்பிள்ளை, கணேசமூர்த்தி ஆகியோரின் சகோதரியும், தம்பிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்), பொன்னம்மா, குலசேகரம்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஆவார். இவர் உதயகுமார் (பிரான்ஸ்), உதயபவானி, உதயராணி, உதயரஜனி, உதயரமா, சசிகலா, தவகுமார், தவகரன, சிவராசலிங்கம் ஆகியோரின் அன்புப் பேத்தியும், கஜாயினி, ஷோபசாலினியின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (11-01-1989) பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கேரதீவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

(8673) பிள்ளைகள்.

## அங்கவீனமுற்றோருக்கு சக்கர வண்டிகள்

### இன்று செயலகத்தில் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன 11

அங்கவீனமுற்ற ஐவருக்கு இன்று யாழ். செயலகத்தில் வைத்து சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

யாழ். செயலகத்தின் சமூக சேவைப் பகுதியில் இன்று காலை 9.30 மணிக்கு நல்லூர், யாழ்ப்பாணம். உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த ஐவருக்கு சமூக சேவைப்பகுதியின் உதவி அத்தியட்சகர் திருமதி கமலா சிவசிதம்பரம் இந்தச் சக்கரவண்டிகளை வழங்குவார்.

ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு அவ்வப்பகுதி உ. அ. அ. பணிமனைகளில் வைத்து வழங்கப்படும்.

அவர்களுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும். (ஓ-10)

## "மீண்டும் போராட்டம்"

கொழும்பு, ஜன 11

தென் மாகாணத்தில் மீண்டும் சுவரொட்டிகள் காட்சியளிக்கத் தொடங்கியுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

பெலியத்தை, மாத்தறை, காலி ஆகிய பகுதிகளில் காணப்பட்ட இச் சுவரொட்டிகளில் "மீண்டும் போராட்டத்தை ஆரம்பிப்போம்" என எழுதப்பட்டிருந்தன என்று செய்திகள் தெரிவித்தன. (ஒ-எ)

## தென்மயிலை சமூகஜோதி



### அமரர் சின்னையா நாகலிங்கம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

தென்மயிலை பெற்றெடுத்த சமூகஜோதி அமரர் சி நாகலிங்கம் அவர்களின் அந்தியேட்டி இன்று புதன்கிழமை (11-1-1989) நடைபெறுகிறது.

அழகான தோற்றம்; நிமிர்ந்த நடை; நேர்கொண்ட பார்வை; புன்சிரிப்பு; சாந்தமான முகம்; அன்பான பேச்சு இவை அனைத்தும் மொத்த உருவமாக காட்சி தந்தவர் அமரர் சின்னையா நாகலிங்கம் ஆசிரியர் அவர்கள் ஆவார்.

இவர், எமது பாலர் ஞானோதய சங்கம், கிராம முன்னேற்றச் சங்கம் ஆகியவற்றின் செயலாளராகவும், தலைவராகவும் நீண்ட காலம் பணிபுரிந்தவராவார். அத்துடன் நீண்டகாலமாக மயிலிட்டி தெற்கு, கிராம சபை அங்கத்தவராகவும் பணியாற்றியவராவார். அவர் ஆற்றிய சேவைகளை மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். மக்கள் வாழ்வையே, தனது நலனுகக்கருதி, வாழ்வையே அர்ப்பணித்த தியாகதீபமாகிய நாகலிங்கம் என்ற ஒளி விளக்கு அணைந்து ஒரு மாதம் ஆகிவிட்டது

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியராக இருந்த இவர் தமது கிராமத்தின் மாணவர்கள் நன்மை கருதி மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயத்தின் அதிபர் பொறுப்பை ஏற்றார். இவர் அதிபராக இருந்த காலத்திலும், பின்பு பெற்றோர் ஆசிரியர் சங்க செயலாளராக இருந்த காலத்திலும், பல முன்னேற்றமான அபிவிருத்திகள் பாடசாலையில் நடைபெற்றன. குறிப்பாக விஞ்ஞான வகுப்பறை, நீர்த்தாங்கி, மின்சாரம், பாடசாலை சுற்றுமதில், விளையாட்டு மைதானம் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இவர் எம்மைவிட்டு பிரிந்தாலும், அவர் ஆற்றிய பணிகள் என்றும் எமது மனத்தில் நிலைத்து நிற்கும். அவரின் ஆத்மா சாந்தி அடைய நாம் அனைவரும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாலர் ஞானோதய சங்கம்,
ஞானோதய கிராம அபிவிருத்திச் சங்கம்
(மயிலிட்டி தெற்கு, கட்டுவன், வறுத்தலைவிளான்)
(8664)

## இவர்கள்--

(1ம்பக்கத் தொடர்ச்சி)

மீது அவசரகால நிலைச் சட்டத்தின் கீழ் தென் இலங்கையில் கைதாகி குற்றச்சாட்டுக்கள் எதுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஜே. வி. பி. சந்தேக நபர்கள் அனைவரும் இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் விடுதலை செய்யப்படுவார்கள். இப்படி அந்த அதிகாரி சொன்னார்.

## அதிகார--

[1ம் பக்க தொடர்ச்சி]

ஒத்துழைப்பு, ஒருமித்த செயற்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கையின் புதிய அரசுடன் உறவுகளை வலுப்படுத்தி விரிவாக்கிக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். -இவ்வாறு திரு. ராஜீவ் காந்தி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் முக்கியமான அம்சங்கள் அமுலாக்கி முடியும் கட்டத்தில் இருப்பதால் இந்த நடவடிக்கைகள் அவசியமாகின்றன என்றார் திரு. ராஜீவ் காந்தி.

இலங்கையில் உள்ள அரசியல் நிலைமை பற்றி கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் நேற்று பிரதமர் காந்தியைச் சந்தித்துத் தெரிவித்தார்.

அதன் பின்னர் பிரதமர் மேற்கண்டவிதமாக இந்தியத் தூதரிடம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றுக்குப் பின்னர் பிரதமர் காந்தியை திரு. டிக்ஸிற் சந்தித்துப் பேசியது இதுவே முதல் முறையாகும். [உ-எ]

## அதிகாலை வேளை ஷெல் வீச்சு!

ஒட்டுசுட்டான் ஜன. 11

முல்லைத்தீவுக்கு அண்மையிலுள்ள தண்ணிமுறிப்புக்குளக்கட்டில் முகாமிட்டிருக்கும் இந்தியப் படைமுகாமிலிருந்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பல ஷெல்கள் கழிக்காடு பகுதியை நோக்கி ஏவிவிடப்பட்டன. (ஒ-113)

## பஸ் கொள்ளையர் கைது!

கொழும்பு, ஜன. 11

நேற்று மினுவாங்கொடையில் இருந்து கம்பஹா நோக்கிச் சென்ற அரசு பஸ் ஒன்றில் கொள்ளையடித்த இரு இளைஞர்களில் ஒருவரை பொலிஸார் கைதுசெய்தனர். (உ-எ)

## கிராம.. ....

பிரிவுகளைக் கவனிக்க முடியும். வறுமைஒழிப்பு நிவாரணத் திட்டத்தை செயற்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது—

இப்படி திரு தேவநாயகம் தெரிவித்தார். (ஒ-எ)

## பாடசாலை மாணவர்------

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடையே பிளவு ஏற்படுத்தும் கருவியாக மொழி அமையக் கூடாது. இனங்களை இணைக்கும் கருவியாக அது பயன்படுத்தப்பட வேண்டும்.

★ அரச ஊழியர் இரு மொழிகளிலும் தகைமை பெற வேண்டும் தாய் மொழியுடன் இன்னொரு மொழியையும் கற்றுக் கொள்ளவேண்டும். அப்படிக் கற்றுக்கொள்வோருக்கு சம்பள உயர்வு வழங்க எண்ணியுள்ளேன். மேலதிகமாக மூன்றாவது மொழியையும் கற்றுக்கொள்வோருக்கு மேலும் சம்பள உயர்வு வழங்கப்படும். இதற்கமைய கல்வி முறையிலும் மாற்றம் கொண்டுவரப்படும்

★ பொலிஸ் சேவைக்கு திரட்டப்படுவோருக்கு அந்தந்த மாகாணத்தில் ஆறுமாத காலப்பயிற்சி வழங்கப்படும். பயிற்சி முடிந்ததும் மாகாண ரீதியில் நியமனமும் வழங்கப்படும் இவர்களுக்கு பின்னர் பொலிஸ் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படும்.

★ பாடசாலை நிர்வாகம் பாடத்திட்டங்கள் ஆகியவை பற்றி தீவிரமாக பரிசிலனைசெய்யப்பட்டு வருகிறது. மாற்றங்கள் அவசியமானால் அவை நிறைவேற்றப்படும்.

★ வறுமை ஒழிப்புத் திட்டம் எதிர்வரும் ஏப்ரலில் செயற்படுத்தப்படும். இதனால் 70 லட்சம் மக்கள் பயனடைவர். [உ-எ]

## தவணையில்-—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

த்த முடியும்.

நகைகளை மீட்டெடுப்பதற்கான முழுப்பணத்தையும் செலுத்திய பிறகு சம்பந்தப்பட்டவர்கள் தமது நகையை வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.

இதே வேளை இம்மாதம் முதலாம் வாரம் வரைக்கும் அறிவிக்கப்பட்டிருந்த 15 சதவீத வட்டிச் சலுகை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

அடகுநகைகளை மீட்பதற்கு பணம் செலுத்தியவர்களுக்கே இந்த வட்டிச்சலுகை வழங்கப்படுகிறது. (அ-ஐ)

## திருத்தம்

நேற்றைய உதயனில் 4 ஆம் பக்கத்தில் வெளியான

**New Master Institute** விளம்பரத்தில்

**89 A/L பிரிவு I — Paper Classes**

(Saturday & Sunday)

ஆரம்பம்:- 15-01-89 — Sunday 8.30 a.m

என்பதற்குப் பதிலாக

**Day Classes பிரிவு III**

திங்கள்—வெள்ளி

இன்று ஆரம்பம் காலை 7.30 மணி

எனத் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## மரண அறிவித்தல்கள்

### நீ. மனுவற்பிள்ளை (தம்பிராசா)

சுருவிலைச் சேர்ந்த நீ. மனுவற்பிள்ளை (தம்பிராசா) காலமானார். இவர் எலிசபெத் முத்தம்மாவின் கணவரும், காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை, மேரிப்பிள்ளை, பிரான்சிஸ் சேவியர், காலஞ்சென்ற அந்தோனிமுத்து, கேட்றாட், பத்திநாதன் (அகில உலக கெயர்) ஆகியோரின் தந்தையும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தல்லடக்கத் திற்காக41, கண்டிவீதியிலுள்ள இல்லத்திலிருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு 11-01-89 புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. பத்திநாதன்.

41, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (8845)

### அன்னம்மா ஆசிர்வாதம்

சரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஓமந்தையை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய ஓய்வுபெற்ற ஆசிரியை அன்னம்மா ஆசிர்வாதம் காலமானார். அன்னார் ஓய்வுபெற்ற அதிபரும் ஓமந்தை பிரபல விவசாயியுமாகிய காலஞ்சென்ற ஆசிர்வாதத்தின் அன்பு மனைவியும் திரு. ஆ. வின்சன்றதுரைராசா (குடியேற்ற அதிகாரி - (C. O) பரந்தன்), திருமதி புஷ்பராணி தருமநாயகம், ஆகியோரின் அன்புத் தாயாரும் திரு. பி. தருமநாயகம் (தொழில்நுட்ப உத்தியோகஸ்தர் - T. A நீர்ப்பாசன இலாகா வவுனியா), திருமதி மேரி கொன்செப்ஷன் ஆகியோரின் அன்பு மாமியாரும் விபிஷ், தரிஷதன், நிஷாந்தினி, தர்ஷிகா, பெனி, விஜந், மனெக்ஷா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இறுதிச் சடங்குகளுக்காக பற்றிமா இல்லம் கேணியடி, கரவெட்டியிலிருந்து 11-1-89 புதன்கிழமை காலை 11 மணிக்கு கரவெட்டி சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
பி. தர்மநாயகம்,

கேணியடி,
கரவெட்டி [8839]

### கணேசபிள்ளை ரவிவண்ணன்

வேலணை மேற்கைச் சேர்ந்த கணேசபிள்ளை ரவிவண்ணன் 2-1 89 இல் ஜேர்மனியில் காலமானார். இவர் கொழும்பு மகேந்திரா ஸ்ரோர்ஸ் கணேசபிள்ளை நீலாம்பிகை அவர்களின் அன்பு மகனும் மதிவண்ணன் (லண்டன்), தர்ஷினி, ஜெயவண்ணன், இதயவண்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்! இவரின் ஈமக்கிரியைகள் 12-1-89 வியாழக்கிழமை 4 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேலணை மேற்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மா. கணேசபிள்ளை,

வேலணை மத்திய கல்லூரிக்கருகாமை
வேலணை. [8669]

### சரஸ்வதி (செல்லமாணிக்கம்)

உடுப்பிட்டி இமையாணன் சந்தை வீதி சிவனடி வாசாவில வசிக்கும் கணபதிப்பிள்ளை சதாசிவம் அவர்களின் அன்பு மனைவி சரஸ்வதி (செல்லமாணிக்கம்) காலமாகிவிட்டார். இவர் சிவசரவணபவ (பவான்) (நீர்ப்பாசன இலாகா, வவுனியா, K.S.S. நகை மாளிகை உரிமையாளர்) வின் அன்புத் தாயாரும், சஞ்சிதராணியின் அன்பு மாமியாரும், கஜந்தின் பாட்டியும், காலஞ்சென்ற பற்மநாதன் காலஞ்சென்ற ஜெகநாதபிள்ளை, ஜெகதல ஜெகசோதி ஆகியோரின் அன்புக் சகோதரியும், நாகரத்தினம், இராஜலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், ஜெகத்குருநாதன் (மந்திதானர் அரசினர் வைத்தியசாலை) Dr. விமலகாந்தன் (யாழ் அரசினர் வைத்தியசாலை), ஜெகன் மோகனதாஸ் (படவரைஞர் கிளிநொச்சி), நாகநந்தினி ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும் ஆனந்தகுமார் (பிரதேச சுகாதார சேவைக் காரியாலயம்) புஷ்பவதி, உதயகுமாரி, சாந்தினி ஆகியோரின் பெரிய மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லூர் வடக்கு கல்வியங்காடு இல. 69, கலைமகள் வீதியில் உள்ள 'பதி' இல்லத்திலிருந்து மாலை 3 மணிக்கு செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

கணவன் சதாசிவம்
மகன் சிவசரவணபவ

'பதி இல்லம்'
69, கலைமகள் வீதி.
நல்லூர் வடக்கு,
நல்லூர். (8670)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ... யாழ்ப்பாணம் நாவலர் வீதி, ...இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 11-01-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd ... Navalar Road, Jaffna on Wednesday 11th January 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org